


மதிப்புக்குரிய
சகோதரர்களின்



கேள்விகளுக்கு
எங்கள் பதில்

வெளியீட்டு
அமீர்,
ஜமாஅத் தமிழ்நாடு
13.05.2020

PHONE:+917502272774
EMAIL:jusai.tn@gmail.com



**எட்டாவது கேள்வி:-** அஹ்மதிய்யா ஜமாத்தின் ஐந்து ஃகலீஃபாக்களில் எந்தெந்த ஃகலீஃபாக்களை நீங்கள் ஃகலீஃபாவாக ஏற்றுக் கொள்கின்றீர்கள்? இறைவனின் ஃகலீஃபாவாக ஏற்றால் அவர்களுடையத் தீர்ப்பு உறுதியான மார்க்கத் தீர்ப்பாக ஏற்பீர்கள் தானே?- கேள்வி கேட்டவர் மதிப்புக்குரிய சகோதரர் மௌலவி- **ஜனாப் ஷாஜஹான் சாஹிப்**

**பதில்:-**

சகோதரரின் கேள்விக்கான எளிமையான பதில் நாங்கள் முதல் நான்கு கலீபாதுல் மஸீஹ்மார்களை,கலீபாதுல் ரசூல்மார்கள் அதாவது ஒரு நபியின் பௌதீக உடல் இந்த உலகத்தை விட்டு சென்ற அத்தருணத்தில் நம்பிக்கைகொண்டோர்களுக்கு ஏற்படும் பயம் மற்றும் அதன் நபியின் ஆட்சியை மற்றும் போதனைகளை இந்த உலகிற்கு எடுத்துச்செல்லும் **நபிமார்கள் அல்லாத** காலம் சென்ற அந்த நபியை தொடரும் கலீபாதுல் ரஸூல்களாக ஏற்றுக்கொள்கின்றோம்.

இன்ஷாஅல்லாஹ் திருகுரானில் இருந்து இந்த கலீபாதுல் ரசூல்மார்களை பற்றி பார்க்கலாம் ஏன்னென்றால் இந்த நூற்றாண்டில் நிலவும் மிகவும் ஒரு தவறான சிந்தனை மேலும் நிசாமிகளால் பரப்பப்படும் ஒரு சிந்தனை என்னவென்றால் இவர்கள் அணைத்து விதமான கலீஃபாக்களையும் **“கலீஃபா”** என்ற வார்த்தையில் இன்னும் வேதம் கொண்டுவந்த நபியை பின்தொடரும் கலீபஃதுல்லாஹ்கள் பற்றி மற்றும் அவர்கள் தோன்றும் காலத்தை பற்றியும் எந்த ஒரு புரிதலையும் மக்களுக்கு வழங்குவதில்லை எனபதே நிதர்சனமான உண்மை

அல்லாஹ் திருக் குர்ஆனில் இவ்வும்மத்திற்காக அருளக்கூடிய ஃகிலாஃபத் பற்றிய வாக்குறுதியில் கூறுவதாவது:

**" அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு, நற்செயலாற்றுபவர்களை, அவர்களுக்கு முன்னிருந்தோரை ஃகலீஃபாக்களாக்கியது போன்று இப்பூமியில் நிச்சயமாக ஃகலீஃபாக்களாக்கி வைப்பதாகவும் இன்னும்**

**அவன் அவர்களுக்காகத் தேர்ந்தெடுத்த அவர்களின் மார்க்கத்தை நிலைப்படுத்துவதாகவும்,அவன் அவர்களுக்கு அவர்களுடைய அச்சத்திற்குப் பிறகு நிச்சயமாக அமைதியைக் கொண்டு மாற்றி விடுவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான்,....”**

**(அல் குர்ஆன் 24:56)**

இவ் வாக்குறுதியிலிருந்து நமக்குப் புலப்படுவது:



**முஜத்தித் மற்றும் கலீபாக்களின் வருகை கியாமத் நாள் வரை தொடரும்**

(மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) )

அல்லாஹ் **கலீஃபாக்களின் காலத்தை (வருகையை) கியாமத் நாள்வரை நீட்டித்துள்ளான், இது இஸ்லாத்திற்குறிய ஓர் அருளும் (கண்ணியமும்) சிறப்புமாகும்.** அதன் உதவிக்காகவும், சீர்திருத்ததிற்காகவுமே ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜதித்கள் வருகை தந்தனர். மேலும் **எதிர்காலத்திலும் தொடர்ந்து வருகை தருவார்கள்.** பாருங்கள்!, சர்வ வல்லமையுள்ள அல்லாஹ் 'كما' என்ற வார்த்தையிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளபடி புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடன் ஒப்பீடு செய்துள்ளான். "நான் கடைசி செங்கலாக இருக்கிறேன்" என்று ஹஸ்ரத் ஈஸா நபி அவர்களே கூறியுள்ளபடி, (ஈஸா நபி) அவர்களே மூஸா நபியின் ஷரீயத்தில் கடைசி கலீஃபாவாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷரீயத்திலும் அது போன்றே அதன் (ஷரீயத்தின்) சீர்திருத்தம் மற்றும் சேவைக்காக, கலீஃபாக்கள் எப்போதுமே வந்து கொண்டிருந்தார்கள். **மேலும் கியாமத் நாள் வரை தொடர்ந்து வந்து கொண்டிருப்பார்கள்.** இவ்வாறாக, அவரது ஒப்புவமை மற்றும் அவருக்கு ஒதுக்கப்பட்ட பணியின் அடிப்படையிலேயே கடைசி கலீஃபாவுக்கும் மஸீஹே மவூத் (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) என்று பெயர் வழங்கப்பட்டது.

(மல்பூஸாத் தொகுதி 10 பக்கம் 262)

1) அல்லாஹ்தன் தரப்பிலிருந்து ஏற்படுத்துவான்

2)முன்னவர்களிடத்தில் ஏற்படுத்தியது போன்று(كما) போன்று ஏற்படுத்துவான். முந்தைய உம்மத்தில்ஏற்படுத்தியது போன்று ∴கிலா∴பத்தை அல்லாஹ் இந்த உம்மத்திலும் எவ்வாறு? எதற்காக? ஏற்படுத்துகிறான் என்பது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் கூறும்போது:

இவ்விளக்கத்திலிருந்து நமக்குத் தெரிவது:

1)இஸ்லாத்தின் கண்ணியம் மற்றும் சிறப்பிற்காகவே அல்லாஹ் ∴கிலா∴பத்தை அருளுகிறான்.

2)அவர்களது வருகை ஒவ்வொரு நூற்றாண்டிலும் இருக்கும்.

3)அவர்களது வருகையானது எதிர் காலத்திலும் மற்றும் கியாமத் நாள் வரையிலும் தொடரும்.

இங்கே கவனிக்கத்தக்கது என்னவென்றால் அவர்கள் தம்மைப் பற்றி ‘கடைசி ∴கலீ∴பா மஸீஹே மவூத்’ என்று கூறியதன் பொருள் அவர்கள் ∴காத்தமுல் ∴குல∴பா(∴ ∴கலீ∴பாக்களில் தலை சிறந்தவர்) என்ற பதவியினாலும்,

மஸீஹின் வாசலைத் திறப்பதற்காக வருகை தந்ததாலுமே அவ்வாறு கூறியுள்ளார்கள்.அவ்வாறு இல்லை என்றால் 'தனக்குப் பிறகும் கூட ஃகலீஃபாக்கள் 'கியாமத் நாள் வரை தொடர்ந்து வந்து கொண்டிருப்பார்கள்' என்று கூறியிருக்கமாட்டார்கள்.மற்றொரு இடத்தில் 'பிற மஸீஹ்கள் பின்வரும் காலத்தில் தோன்றுவார்கள்....நான் இக்காலத்திற்கு மட்டுமே மஸீஹாக உள்ளேன்....'(இஸாலயே அவ்ஹாம் பக்..197) என்று கூறியதிலிருந்தும் தெளிவாகின்றது.

ஹஸ்ரத் முனீர்(அலை) அவர்கள் கூறும்போது: இவ்வசனத்திலிருந்து (24:56) கலீஃபா என்பவர் நபித்துவத்தின் அடிப்படையிலானவர்.இந்த நபரை அல்லாஹ் அவர் மீது இறை வஹி இறங்குகின்ற நிலையில் நபித்துவ அந்தஸ்துடன் எழுப்புகின்றான்..

அடுத்து ஃகிலாஃபத்தின் வகைகள் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூது(ரலி) அவர்கள் ஸூறா அந்நூர் 24:56 வசனத்திற்கு தஃப்ஸீரே கபீரில் விளக்கமளிக்கும்போது :

குர்ஆன் முன்று வகைப்பட்ட ஃகலீஃபாக்களைக் குறிப்பிடுகின்றது..

(1) ஆதம்(அலை) மற்றும் தாவூத்(அலை) போன்ற **<u>நபிமார்களாகிய ஃகலீஃபாக்கள்</u>**. ஆதத்தைப் பற்றி இறைவன் குர்ஆனில் " நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை (ஃகலீஃபாவை) ஏற்படுத்தப் போகிறேன்(2:31) என்று கூறுகின்றான்.மேலும் தாவூத்(அலை) அவர்களைப் பற்றி அவன் கூறுகின்றான்: தாவூதே! நாம் உம்மை இப்பூமியில் ஒரு பிரதிநிதியாக (ஃகலீஃபாவாக) ஆக்கியுள்ளோம்(38:27).

(2) இஸ்ராயீல் நபிமார்களைப் போன்று மற்றொரு மற்றும் **<u>ஒரு பெரிய நபியின் ஃகலீஃபாக்களாக இருக்கக் கூடிய நபிமார்கள்.</u>** அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் மூஸா(அலை) அவர்களின் ஃகலீஃபாக்களாக துஇருந்தார்கள். அவர்களைப் பற்றி குர்ஆன்:"நிச்சயமாக நேர்வழியும்,ஒளியும் பெற்றிருந்த தவ்ராத்தை நாம் இறக்கினோம்.கட்டுப்பட்டு நடந்த நபிமார்கள் அதனைக் கொண்டு யூதர்களுக்கு தீர்ப்பு வழங்கினர்..(5:45)

(3) **<u>ஒரு நபியின், உலகியல் அதிகாரம் கொண்ட அல்லது இல்லாத நபி அல்லாத ஃகலீஃபாக்கள்</u>**.இறைச் சட்டங்களை கற்றறிந்த இறைமக்களைப் போன்றவர்கள்.அவர்களுடையப் பணியானது (இறைச்) சட்டம் கறைப்படுவதிலிருந்தும் பேணுவதும் பாதுகாப்பதுமாகும்.(5:45)

விரிவாக, இந்த வசனத்தின் கருத்தின் கீழ் இவ்வாறான அனைத்து வகையான ஃகலீஃபாக்களையும் உள்ளடக்கியுள்ளது..அதாவது, நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் நேர்வழிபெற்ற ஃகலீஃபாக்கள்,

வாக்களிக்கப்பட்ட மஸீஹ்,அவர்களின் பின்தோன்றல்கள் மற்றும் ஆன்மீக சீர்திருத்தவாதிகள் அல்லது முஜத்தித்கள்

(தஃப்ஸீரே கபீர் வசனம் 24:56 ன் விளக்கத்திலிருந்து)

*ஆக மேற்கூறியுள்ள விளக்கத்திலிருந்து நமக்குப் புரிவது தற்போது இறைவனால் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படுகின்ற(இரண்டாம் வகை) மற்றும் ஒரு நபியைப் பின்பற்றுபவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற (மூன்றாம் வகை) ஃகலீஃபாக்களின் வாசல்களும் திறந்துள்ளன.அதாவது (1)*வாக்களிக்கப்பட்ட மஸீஹ், (2)அவர்களைத் தொடர்ந்து வரக் கூடியவர்கள் மற்றும் (3)ஆன்மீக சீர்திருத்தவாதிகள் அல்லது முஜத்தித்களின் வருகை எஞ்சியுள்ளது என்பது தெளிவாகின்றது..

இவற்றின் அடிப்படையில் **அஹ்மதிய்யா ஜமாத்தின் ஃகலீஃபாக்கள் என்பவர்கள்** ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூத்(ரலி) அவர்களின் வரையறையின்படி இறைவனால் நேரடியாக நியமிக்கப்படுகின்ற வகையிலல்லாத தேர்ந்தெடுக்கப்படக்கூடிய மூன்றாம் வகையைச் சார்ந்தவர்கள் என்பது தெளிவாகின்றது..**ஆகவே, ஜமாத்துல் ஸஹீஹ் அல் இஸ்லாம் ஹஸ்ரத் மஸீஹே மவூது(அலை) அவர்களுக்குப் பின் தோன்றிய முதல் ஃகலீஃபாவிலிருந்துத் தொடங்கி தற்காலம் அல்லாஹ்வினால் நேரடியாக நியமிக்கப்பட்டுள்ள அல்லாஹ்வின் ஃகலீஃபா ஹஸ்ரத் முனீர் அஹ்மது (அலை) அவர்களுக்கு முன்னர் வரையுள்ள நான்கு ஃகலீஃபாக்களை ஏற்றுக் கொள்கிறோம்**.

அடுத்து, அஹ்திய்யா ஜமாத்தின் **ஃகலீஃபாக்கள் 'இறைவனின் அல்லது அல்லாஹ்வின் ஃகலீஃபாக்களா?**

ஒரு நபியின் நபி அல்லாத ஃகலீஃபாக்களின் வகையைச் சார்ந்தவர்களை "இறைவனது அல்லது அல்லாஹவின் ஃகலீஃபா" என்று அழைக்க முடியாது என்பதற்குரிய சான்றுகள் பின்வருமாறு:

1)

حدثنا موسى بن داود حدثنا نافع يعني ابن أبي مليكة قال قيل لأبي بكر رضي الله عنه يا خليفة الله فقال أنا خليفة رسول الله صلى الله عليه وسلم وأنا راض به وأنا راض به وأنا راض

*அல்லாஹ்வுடைய கலீஃபாவே என்று அபூபக்ர் அவர்களை நோக்கிக் (ரலி) அப்போது அவர்கள் .கூறப்பட்டதுநான் அல்லாஹ்வின் தூதருடைய கலீஃபா ஆவேன்இவ்வாறு (அல்லாஹ்வின் கலீஃபா அல்ல) . இவ்வாறு அழைப்பதையே நான் .அழைப்பதையே நான் விரும்புகிறேன் இவ்வாறு அழைப்பதையே நான் விரும்புகிறேன் என்று .விரும்புகிறேன் .**கூறினார்கள்*** அறிவிப்பவர் அபூ முலைக்கா :, நூல் அஹ்மத் :56

2) ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூத்(ரலி) அவர்கள் கூறும்போது: "....அப்படிப்பட்ட மக்கள் என்னிடம் கேட்கின்றார்கள்:நீங்கள் யார்? நீங்கள் அரசரா? நான்,"

'இல்லை'எனக் கூறுகிறேன்.நீங்கள் இறைவனால் நேரடியாக நியமிக்கப்பட்டவரா?(என்றும் கேட்கின்றார்கள்).அதற்கு நான்,' 'இல்லை' என்றேக் கூறுகிறேன்..."(நூல்:ஃகிலாஃபத்தின் அருள்கள்-ஆங்கிலம்-பக்.11)

3) ஹஸ்ரத் மஸீஹே மவூத்(அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இரண்டாம் கலீஃபா ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் வஹியைப் பெறக்கூடியவராக இருந்த போதிலும் கூட வானத்தின் இறைவனால் நியமிக்கப்படுகின்ற உண்மையான இமாமத்தில் தன்னை ஒரு பங்குதாரராகவோ அல்லது அதற்கு தகுதியுடையவராகவோக் கருதவில்லை..(நூல்: இமாமின் அவசியம்-ஆங்கிலம், பக்கம்:4)

மூன்றாம் வகைப்பட்ட மற்றும் ஒரு நபியின் நபி அல்லாத ஃகலீஃபாக்களின் காலம் நிரந்தரமானதல்ல என்பதும் இறைவன் தன்புறமிருந்து அனுப்புகின்ற நேரடி ஃ கலீஃபாக்களின் வருகை வரை மட்டுமே என்பதும் திருக்குர்ஆன்,நபிமொழி,வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி ஆகியோரின் எழுத்துக்களிலிருந்தும் நமக்குத் தெளிவாகின்றது..உதாரணமாக

(1) "இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாமே இறக்கினோம்.நிச்சயமாக நாமே இதனை பாதுகாப்போம்" என்ற திருக்குர்ஆன் வசனத்தின் விளக்கத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூத்(ரலி) அவர்கள் தானே ஒரு ஃகலீஃபாவாக இருந்த போதிலும், **'நமது இக்காலத்தில் இஸ்லாத்தின் இறைவன் பேசக்கூடியவனாவான் என்பதை நிருபிக்கும் விதத்தில் வாக்களிக்கப்பட்ட**

**மஸீஹாகிய அஹ்மதை எழுப்பியுள்ளான் என்றும் திருக்குர்ஆனின் வாக்குறுதிக்கேற்ப அவ்வாறே எதிர்காலத்திலும் எப்போதெல்லாம் முஸ்லிம்கள் திருக்குர்ஆனின் போதனைகளை மறந்து விடுகிறார்களோ அல்லது வழிதவறிவிடுகின்றார்களோ அப்போதெல்லாம் அல்லாஹ் அவர்களை அசலான பரிசுத்த நம்பிக்கையின்(ஈமான்) பால் மீட்டெடுக்கும் வானத்தின் சீர்திருத்தவாதிகளை எழுப்புகின்றான்'** என்றும் கூறி அவ்வாறு இறைவனால் நியமிக்கப்படுபவர்களை வேறுபடுத்திக் காட்டியுள்ளார்கள்.. (த..ப்ஸீரே கபீர் வசனம் 15:10ன் விளக்கம-பகுதி 3-பக்கம்1266)

(2)அதுபோன்று ஹஸ்ரத் நபிகரீம்(ஸல்) அவர்கள் தன்னைத் தொடரந்து வரக்கூடிய நபிமார்கள் அல்லாத ..கலீ..பாக்களின் காலம் பற்றி குறிப்பிடும் போது:

"நபி வழியிலான கிலா..பத் முப்பது ஆண்டுகள் நீடிக்கும். பின்னர் அல்லாஹ் தான் விரும்புவோருக்கு ஆதிக்கத்தைக் வழங்குவான்" (அபூதாவூத்,அல் ஹாகிம்,ஸஹீஹ் அல் ஜாமிவுஸ் ஸஹீர் எண்:3257)

ஆக, நான்காவது ..கலீ..பாவாகிய ஹஸ்ரத் அலி(ரலி) அவர்களோடு அங்கே ..கிலா..பத் முற்றுப் பெறவில்லை;மாறாக அதன் பிறகும் கூட நபி(ஸல்) அவர்களது பேரப்பிள்ளை ஹஸ்ரத் ஹஸன்(ரலி) அவர்கள் ஐந்தாவது ..கலீ..பாவாகவும், முஆவியா அவர்கள் ஆறாவது ..கலீ..பாவாகவும் கவும்

அதன் பிறகும் கூட ..கிலா..பத் தொடர்ந்து செல்கின்றது..ஆயினும் ஹஸ்ரத் நபி கரீம்(ஸல்) அவர்கள் நேர்வழி பொருந்தியதாக முதல் 30 வருடத்தின் நான்கு ..கலீ..பாக்களின் ..கிலா..பத்திற்கே சான்றளித்துள்ளார்கள்..

உண்மையில், நிரந்தரமான ..கிலா..பத் அல்லது என்றென்றும் தொடர்ந்து செல்லக் கூடியத் தன்மையை அந்தஸ்தில் உயர்வு பெற்ற நபி(ஸல்) அவர்களது சஹாபாக்களுக்குக் கூட கிடைக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்..

ஆயினும் அல்லாஹ் தனது அன்பிற்குரிய கண்மணி நாயகம்(ஸல்) அவர்களுக்கு அளித்த வாக்குறுதியின் படி சரியாக நூற்றாண்டின் திருப்பத்தில் மீண்டும் நேர்வழியின் பக்கம் மக்களை மீட்டெடுப்பதற்காக தனது ..கலீ..பாவை நியமித்தான்..அதன் பிறகும் கூட ஒவ்வொரு நூற்றாண்டிலும் அனுப்பி கொண்டிருந்தான்.அந்த வரிசையில் ஹஸ்ரத் மஸீஹே மவூத்(அலை) அவர்கள் 13-வது ..கலீ..பாவாக இறைவனால் நியமிக்கப் படுகின்றார்கள்.

(3)அவ்வாறான இறைவனின் நேரடி ஃகலீஃபாக்களின் தொடர் ஹஸ்ரத் மஸீஹே மவூத்(அலை) அவர்களுக்குப் பிறகும் தொடரும் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.(மல்ஃபூஸாத் தொகுதி10,பக்கம்-262)

ஆகவே, ஒரு நபியைத் தொடர்ந்து வருகின்ற தேர்ந்தெடுக்கப்படும் ஃகலீஃபாக்களை இறைவனின் நேரடி ஃகலீஃபாக்களாக கருத முடியாது.மேலும் அவர்களிடத்தில் ஏற்படுகின்ற தவறான மார்க்கத் தீர்ப்புகள் அல்லது மார்க்கத்திற்கு மாற்றமாக எடுக்கப்பட்ட ஏதேனும் முடிவுகள் மற்றும் அம்மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள பலஹீனங்கள் போன்றவற்றை நூற்றாண்டின் திருப்பத்தில் அல்லாஹ்வால் நியமிக்கப்படுகின்ற அவனது நேரடி ஃகலீஃபாக்களேச் சுட்டிக் காட்டி உறுதியான மார்க்கத் தீர்ப்பை மீண்டும் இவ்வுலகில் நிலைநாட்டுகின்றனர்.

ஹஸ்ரத் இரண்டாம் ஃகலீஃபதுல் மஸீஹ்(ரலி) அவர்களின் தனிச் சிறப்பு:

அஹ்மதிய்யா ஜமாத்தில்,ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத்(ரலி) அவர்கள் இரண்டாவது தேர்ந்தெடுக்கப்பட்ட ஃகலீஃபாவாக இருந்தும், காலத்தின் அவசியத்தினால் அவர்களை அல்லாஹ்(சுபஹ்) வாக்களிக்கப்பட்ட மகனாகவும்,சீர்திருத்தவாதியாகவும் தன் தரப்பிலிருந்து தேர்ந்தெடுக்கின்றான். **அல்லாஹ்விடமிருந்து அறிவிப்பைப் பெற்ற பிறகே அவர்கள் அவ்வாறு வாதித்தார்கள்**,அதறகு முன்பு வரை அவ்வாறு வாதிக்க வில்லை என்பதை நாம் அறிவோம், ஆகவே **இறைவனிடமிருந்து எந்த அறிவிப்பும் கிடைக்காதவரை ஒருவரை 'அல்லாஹ்வின் ஃகலீஃபா' என்றோ அல்லது இறைவனால் நியமிக்கப்படுகின்ற 'காலத்தின் இமாம்' என்றோ ஒருவரும் வாதிக்க முடியாது** என்பதும் தெளிவாகின்றது.வஹியைப் பெறக்கூடியவராக இருந்தும் கூட **இரண்டாம் ஃகலீஃபா ஹஸ்ரத் உமர்(ரலி) தன்னை 'காலத்தின் இமாம்'என்று கருதிக் கொள்ளவில்லை** என்பதை **ஹஸ்ரத் மஸீஹே மவூது(அலை) அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள் என்பதையும் ஏற்கனவேப் பார்த்தோம்..**

**ஹஸ்ரத் மஸீஹே மவூது(அலை) அவர்களின் ஃகலீஃபாக்களே கியாமத் வரைத் தொடர்வார்கள் என்ற அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கை பற்றிய ஓர் ஆய்வு:**

(1)**அஹ்மதிய்யா ஜமாஅத் ஆதாராமாக வைக்கின்ற ஹதீஸின் சுருக்கம்:**

அல்லாஹ் நாடுகின்றவரை உங்கள் மத்தியில் நபித்துவம் நிலைபெற்றிருக்கும்....பிறகு நபித்துவ வழியிலான ஃகிலாஃபத் அமையும்..... ***பிறகு கடினமான மன்னராட்சி அமையும்.... பிறகு நபித்துவ வழியில் கிலாஃபத் அமையும்..பின்னர் அவர்கள் (நபி) அமைதியாக இருந்தார்கள். (நூல் :அபூதாவூத் &அஹ்மத்-எண்:17680)***

இந்த ஹதீஸின் படி நபி(ஸல்) அவர்கள் தன்னைத் தொடர்ந்து வரும் ஃகிலாஃபத்திற்குப் பிறகு மன்னராட்சி ஏற்படும் என்று கூறியது போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்குப் பிறகு தோன்றும் கிலாஃபத் விஷயத்தில் எதனையும் கூறாமல் அமைதியானார்கள் என்பதிலிருந்து ஆஃகிரீன்கள் மத்தியில் ஏற்படும் இந்த கிலாஃபத் இறுதி நாள் வரை செல்லும் என்பது அஹ்மதிய்யா ஜமாத்தின் வாதமாகும்.

இந்த ஹதீஸை உற்று நோக்கினால் நமக்குப் புரிவது:

1)இங்கே குறிப்பிட்டுள்ள ஃகிலாஃபத் என்பது ஒரு நபியின் நபி அல்லாத ஃகலீஃபாக்களை(மூன்றாம் வகை)யைச் சார்ந்தது என்பதுத் தெளிவு.. ஏனென்றால் ஃகலீஃபா ராஷிதீன்களுக்குப் பிறகும் கூட அல்லாஹ் ஒவ்வொரு நூற்றாண்டிலும் அவனது நேரடி ஃ கலீஃபாக்களை அனுப்பினான்.இது பற்றியே ஹஸ்ரத் மஸீஹே மவூத்(அலை) அவர்கள் "(ஷரீஅத்தின்) சீர்திருத்தம் மற்றும் சேவைக்காக ஃகலீஃபாக்கள் எப்போதும் வந்து **கொண்டிருந்தார்கள்**" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.(மல்ஃபூஸாத் தொகுதி10,பக்கம்-262)

2) ஹஸ்ரத் மஸீஹே மவூத்(அலை) அவர்கள் வசனம் 24:56க்கு விளக்கமளிக்கும்போது: "இப்போது கவனமாக பாருங்கள்! இந்த வசனமும் அதே ஒப்புவமைக்கான தெளிவான குறிப்பையும் கொண்டுள்ளது.. இந்த ஒப்புவமையின் மூலம் (அதேப் போன்ற) பூரணமான ஒற்றுமை இல்லை என்றால், இந்த வார்த்தைகள்((كما) அர்த்தமற்றவையாகும். ஏனெனில், (ஹஸ்ரத்) மூஸா(அலை) அவர்களது (நுபுவ்வத்தின்) காலத்தில் ஃகிலாஃபத்தின் சங்கிலித் தொடர் வெறும் 30 வருடங்களி(ல் முடிந்து விடாம)ல்,பதினான்கு நூற்றாண்டுகள் நீடித்திருந்தது (மட்டுமல்லாமல்) ஆன்மீகமான மற்றும் வெளிப்படையான ஃகலீஃபாக்களும் தோன்றினர், நான்கு (ஃகலீஃபாக்கள்) மட்டுமேத் தோனறி , பின்னர் என்றென்றிற்கும் முடிந்து விடவுமில்லை.(ஷஹாதத்துல் குர்ஆன் உர்தூ-பக்கம்-20)..

இதிலிருந்து முஹம்மதிய்ய உம்மத்திலும் ஒரே வகையான ஃகலீஃபாக்கள் மட்டுமல்ல அனைத்து வித ஃகலீஃபாக்களும் வருகை தருவர் என்பதுப் புலனாகின்றது.

3) ஹஸ்ரத் முனீர்(அலை) அவர்கள் மேற்குறிப்பிட்ட ஹதீஸை இவ்வாறு விளக்குகின்றார்கள்:“....பிறகு நபித்துவ வழியிலான ஃகிலாஃபத் நிறுவப்படும்..பிறகு, ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் சிறிது நேரம் அமைதியாக இருந்தார்கள்.இந்த சிறிது நேர அமைதியின் இடைவெளியின் போது ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் சில செய்திகளை (இறைவனிடமிருந்து) பெற்றுக் கொண்டிருந்தார்கள்.இந்த அமைதியானது இவ்விஷயத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தை ஸஹாபாக்களிடம் அதிகப்படுத்தியது.அந்த அமைதியானது அல்லாஹ்விடமிருந்து வந்த ஒரு செய்தியை அறிவித்தது.அதாவது, அல்லாஹ் ஒரு ஃகலீஃபாவை அனுப்பவான்.அவர் மக்களைப் பாதுகாப்பவராகவும், நேரானப் பாதையில் வழிகாட்டக் கூடியவராகவும் இருப்பார்.ஆனால், இது தொடரும்போது மக்கள் அல்லாஹ்விற்கு பதிலாக ஃகலீஃபாவின் மீது கொண்டிருக்கின்ற அச்சம் ஆரம்பமாகும்.இப்படிப்பட்ட அச்சம் உள்ளத்தில் ஏற்படத் தொடங்கும் போது அவர்கள் மனிதன் மீதான அச்சம் கொள்ள ஆரம்பித்துப் பிறகு அல்லாஹ்வின் பால் மக்களை அழைப்பதற்கு பதிலாக மனிதனின் பால் (மக்களை)அழைக்கத் தொடங்குவார்கள்.

<u>**2)அல் வஸிய்யத் புத்தகத்தில் அஹ்மதிய்யா ஜமாத்தின் ஃகிலாஃபத் பற்றி அது நிரந்தரமானது என்று எழுதப்பட்டுள்ளது**</u>..

எது நிரந்தரமானது? என்பது பற்றி பார்ப்போம்.அல் வஸிய்யத் (தமிழ்)

புத்தகம் பக்கம் 12 இல் ஹஸ்ரத் மஸீஹே மவூத்(அலை) அவர்கள் கூறும் போது:”ஏனெனில் அந்த <u>**இரண்டாவது வல்லமை**</u>யைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும்.மேலும், அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும்.அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது”.

இரண்டாம் வல்லமைப் பற்றி ஹஸ்ரத் மஸுஹே மவூத்(அலை) அவர்கள் அல் வஸிய்யத்தில் குறிப்பிடும் போது:

(1)”இரண்டாவதாக ஒரு நபி மரணிக்கி என்ற சமயத்தில், அந்த நபியின் மரணத்திற்குப் பின்னர்........அப்போது இறைவன் இரண்டாம் முறையாக தனது மகத்தான வல்லமையை வெளிப்படுத்துகிறான்......அப்போது இறைவன் ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக்(ரலி)(ரலி) அவர்களை நியமித்து மீண்டும் தனது வல்லமையின் முன்மாதிரியைக் காட்டினான்..(பக்கம்11)

(2)மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள்..அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள்..எனவே நீங்கள் இறைவனுடைய இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்று சேர்ந்திருந்து துஆ செய்துகொண்டிருங்கள்..........அதன் மூலம் இரண்டாவது வல்லமை விண்ணிலிருந்து இறங்கி உங்கள் இறைவன் எப்படிப்பட்ட வல்லமை மிக்க இறைவன் என்பதை உங்களுக்குக் காட்டட்டும்..

ஆக இங்கு **இரண்டாவது வல்லமை என்பது** முதலில் ஒரு நபியுடைய மரணத்திற்குப் பிறகு உடனேயும், **அதன் பின்னர் இரண்டாவதாக விண்ணிலிருந்தும் இறங்குகின்றது..இது பற்றி ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்கள் விளக்கும் போது**:

ஹஸ்ரத் மஸீஹ்(அலை) அவர்களது நம்பிக்கையின் அடிப்படையில் "ஃகிலாஃபத்" என்பதன் பொருள் **நான்கு நேர்வழி பொருந்திய ஃகலீஃபாக்களை மட்டுமின்றி** இதை என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகின்றான் என்றும் அன்னார் நம்பிக்கைக் கொண்டிருந்தார்கள்; அதனால் தான் அன்னார் **"இந்த அஹ்மதிய்யா ஃகிலாஃபத்' என்றென்றும் நிலைத்திருக்கும்" என்று கூறவில்லை**; மாறாக என்றென்றும் நினலத்திருக்கும் என்று அவர்கள் கூறியது

**1) ஃகுத்ரதே ஸானியா**

**2) இஸ்லாமிய ஃகிலாஃபத்**

**1) ஃகுத்ரதே ஸானியா**

"ஃகுத்ரதே ஸானியா" கிலாஃபத்தை உள்ளடக்கியது.இங்கே 'ஃகிலாஃபத்' என்று குறிப்பிடுவது மெறும் 'அஹ்மதிய்யா ஃகிலாஃபத்' மட்டுமல்ல;மேலும் இதனை வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் தனது "அல் வஸ்ஸிய்யத்" என்ற புத்தகத்தில் குறிப்பிடும் போது தனது இந்த "குத்ரத்தை" (இரண்டாவது வல்லமையை) ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக்(ரலி) அவர்களின் தோற்றத்துடன் ஒப்பிடுகின்றார்கள்; அதாவது இதனை "இஸ்லாமிய ஃகிலாஃபத்" துடன் ஒப்பிடுகின்றார்கள்

**2) இஸ்லாமிய ஃகிலாஃபத்** -

மேலும், இங்கே 'இஸ்லாமிய ஃகிலாஃபத்' என்பது 'ஃகலீஃபதுல் ரஸூல்'மார்களையும்,'முஜத்தித்'மார்களையும்,' மஸீஹ்'கள் அல்லது

'ஃகலீபஃத்துல்லாஹ்'களையும் அடக்கியது என்பதை நாம் அறிந்ததே, மேலும் இதனை விளக்குவதென்றால் மஸீஹ்(அலை) அவர்களின் காலத்தில் ஒருவர், "உங்களுக்குப் பிறகு முஜத்தித்மார்கள் வருவார்களா?" என்று கேட்டார், அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள் :-

" **எனக்கு பிறகு ஒரு முஜத்தித் வருதில் என்ன தவறு இருக்கின்றது?, மூஸா (அலை) அவர்களது நபித்துவமானது முடிவடைந்து போனது; அதனால்தான் அவர்களது ஃகலீஃபாக்களின் தொடரானது ஈஸா(அலை) அவர்களோடு முடிந்து போனது; ஆயினும் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் தொடரானது கியாமத் நாள் வரைத் தொடரும். ஆகவே,முஜத்தித்மார்கள் கியாமத்நாள் வரைத் தொடநது வந்து கொண்டிருப்பார்கள். ஒரு வேளை கியாமத் நாள் நீட்டிக்கப்பட்டாலும் அதற்கும் ஒருவர் தோன்றுவார். நாம் ஒருபோதும் நல்லடியார்களும்(ஸாலிஹீன்கள்), புனிதர்களும்(அப்ரார்கள்) தொடர்ந்து வருகை தருவார்கள் என்பதை நிச்சயமாக மறுக்கவில்லை.அப்போது திடீரென்று கியாமத் வந்துவிடும்** ( மல்பூசாத்,பாகம் 7, பக்கம்119)

ஆக, இரண்டாம் வல்லமை என்பது **முதலில் அந்த நபியின் மரணத்திறகுப் பிறகு அவரைப் பின்பற்றுபவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுவதன் மூலமும்**,பின்னர் இரண்டாவதாக, அந்நூற்றாண்டின் முடிவில் அம்மக்களைத் தூய்மைப் படுத்துகின்ற மற்றும், மார்க்கத்திற்கு மீண்டும் புத்துயிர் வழங்குகின்ற தேவையும் ஏற்பட்டு விடுவதால் அல்லாஹ் மீண்டும் ஒருவரை விண்ணிலிருந்து 'ரூஹுல் குதுஸ்' மூலமும் ஏற்படுத்திவிடுகின்றான்..

இதனையே ஹஸ்ரத் மஸீஹே மவூத்(அலை) அவர்கள் விளக்கும் போது:

**"தூய மனதைக் கொண்ட ஜமாத்தின் சான்றோர்கள் என் பெயரில் எனக்குப் பிறகு மக்களிடமிருந்து பைஅத் வாங்கட்டும்" (பக்.14)** என்று இரண்டாம் வல்லமையின் முதல் பகுதியையும், பின்னர்,"**எனக்குப் பிறகு யாராவது இறைவனிடமிருந்து பரிசுத்த ஆவியை (ரூஹுல் குதுஸை) பெற்று நிற்காதவரை நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்றுங்கள்"(பக்..14)** அதாவது அல்லாஹ் வானிலிருந்து ஒருவரை ரூஹுல் குதுஸ் மூலம் இறக்குகின்றவரை முதல் நிபந்தனையின் படி உங்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுத்து ஒன்று சேர்ந்து பணியாற்றுங்கள்..

**ரூஹுல் குதுஸ் என்றால் என்ன?**

**(1)"...அப்போது நாம் அவரிடத்தில்(மர்யம்) நம் ரூஹை அனுப்பினோம் ...."( அல் குர்ஆன் 19:18)**

இவ்வசனத்தில் வரும் "ரூஹனா" என்ற சொல்லிற்கு 'நமது வானவர்' என்று பொருள்படும் என்றும், (மர்யம்(அலை)) அவர்களுக்கு இறை வெளிப்பாடு ஒரு கனவின் அல்லது தரிசனத்தின்(கஷ்ஃபின்) வடிவிலோ வெளிப்பட்டது.ஒரு வானவர் ஓர் ஆரோக்கியமான மனிதனின் வடிவத்தில் அவர்களிடம் வந்து ஒரு மகனின் பிறப்புப் பற்றிய இறைச் செய்தியை(வஹீ) அளித்ததை அவர்கள் ஒரு தரிசனத்தில் கண்டார்கள்.. அடிப்படை (தஃப்ஸீரே கபீர் -விளக்கம் எண்:2162,பக்.1568).

(2)"......**நாம் மர்யமின் மகன் ஈஸாவுக்கு மிகத் தெளிவான சான்றுகளை வழங்கி தூய ஆவியின் (ரூஹுல் குதுஸ்) மூலம் அவருக்கு வலிமையையும் அளித்துள்ளோம்**......"(அல் பகறா 2:254)

இதற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூத்(ரலி) விளக்கமளிக்கும் போது:

உண்மையில்,எல்லா நபிமார்களுக்கும் தெளிவான சான்றுகளும் வழங்கப்படுகின்றன மேலும் அனைவரும் ரூஹுல் குதுஸ்(பரிசுத்த ஆவியின்) மூலம் பலப்படுத்தப்படுகின்றார்கள்..என்று கூறுகின்றார்கள்.. (தஃப்ஸீரே கபீர் -விளக்கம் எண்:260,பக்.322).

ஆக இவற்றிலிருந்து இரண்டாம் வல்லமையின் பிற்பகுதியானது வஹியைக் கொண்ட ஒருவரை அல்லாஹ் வானத்திலிருந்து இறக்குகின்றான்.அதாவது அவனேத் தன் தரப்பிலிருந்து நேரடியாக நியமிக்கின்றான் என்பதுத் தெளிவாகின்றது.இதனையே ஹஸ்ரத் மஸீஹே மவூத்(அலை) அவர்கள்,"அவருக்கு எனது நெருக்கத்தின் மூலமாகவும், வஹியின் மூலமாகவும் சிறப்பை வழங்குவேன்" (அல் வஸிய்யத்-உயில் பக்..14-அடிக்குறிப்பு எண்:2)

மேலும், குர்ஆனின் போதனைகளிலிருந்தும், வரலாற்றிலிருந்தும் நாம் அறிந்தது போன்றே, எப்பொழுதெல்லாம் அல்லாஹ் ஒருவரை எழுப்புகின்றானோ அப்பொழுதெல்லாம் அம்மக்கள் அவர் மீது தவறான எண்ணம் கொள்வதும் அவரை எதிர்ப்பதும் அவர்களது நடைமுறையாக இருந்து வந்தது..இதனையே மிகத் தெளிவாக அன்னார் இவ்வாறு எச்சரிக்கின்றார்கள்: "ஒவ்வொருவரும் அவருக்குரிய நேரத்தில் தான் இனங்கண்டு கொள்ளப்படுகின்றார்..அந்த நேரத்திற்கு முன்னர் அவர் ஒரு சாதாரண மனிதராக தென்படுவது சாத்தியம் தான் அல்லது சில

ஏமாற்றுகின்ற எண்ணங்கள் காரணமாக அவர் ஆட்சேபனைக்கு உரியவராகவும் இருக்கலாம்"..(உயில் பக்..14-அடிக்குறிப்பு எண்:2)

அவ்வாறு ஆட்சேபனைக்குரியவராக இருக்கின்ற ஒரு நபர் எவ்வாறு 40 நம்பிக்கையாளர்களால் ஒருமித்த கருத்துடன் தேர்வு செய்ய முடியும் (உயில் பக்..14-அடிக்குறிப்பு எண்:2) என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்.அல்லாஹ் இரண்டாம் வல்லமை குறித்த ஞானத்தை அனைவருக்கும் புரிய வைப்பானாக! அல்லாஹ்வினால் நேரடியாக அனுப்பப் படுகின்ற அந்த வல்லமையை ஏமாற்றுகின்ற தவறான எண்ணங்களினால் நிராகரித்து விடாமல் முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளும் பாக்கியத்தையும் வழங்குவானாக!

**கேள்வியின் இரண்டாவது பகுதி** :- இறைவனின் ஃகலீஃபாவாக ஏற்றால் அவர்களுடையத் தீர்ப்பு உறுதியான மார்க்கத் தீர்ப்பாக ஏற்பீர்கள் தானே?

நாங்கள் உங்களுக்கு மேலே கூறிய விஷயம் இந்த கேள்வியிலில் இருந்து இந்த நூற்றாண்டின் மக்களின் நிலையை பற்றி தெளிவாக தெரிந்துகொள்ளலாம். இறைவனின் கலீஃபா யார்? அவர் எவ்வாறு தேர்வு செய்யப்படுகின்றார்? மேலும் ஒரு நபியை பின்தொடரும் கலீஃபா யார் அவர் எவ்வாறு தேர்வு செய்யப்படுகின்றார்? இவர்களின் வேலை என்ன? என்பதை பற்றி அறியாமல் **எல்லாவிதமான கலீபாக்களையும் ஒரே பெயரில் அழைப்பது என்பது உண்மையை தேடும் ஒருமனிதர் தெளிவாக அரித்து கொள்ளலாம்,**

**மேலும் மார்க்க தீர்ப்பு என்பது ஒரு கலீபாதுல் மஸீஹ் அல்லது ரஸூலின் சொந்த கருத்துக்கள் அல்ல!!! மாறாக அது இறைவனின் இறுதி வேதமான திருகுர்ஆன் மற்றும் நபிமொழி மேலும் இறைவஹீயின் அடிப்படிப்படையிலானது**

**உம்முடைய இறைவனிடமிருந்து உமக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதையே நீர் பின்பற்றுவீராக - அவனைத் தவிர இறைவன் வேறில்லை; இணை வைப்போரை நீர் புறக்கணித்துவிடும்.**

**(அல்குர்ஆன் : 6:107)**

மேலும் இது தொடர்பாக மேலும் பல கேள்விகள் தெளிவாக உள்ளதால் அடுத்தடுத்த பதில்களில் இன்ஷாஅல்லாஹ் தெளிவாக பதிலளிக்கப்படும்

**கலீபா**: பின்தொடர்பவர் .**<u>அல்லாஹ்வின் கலீபா* என்ற வார்த்தை *நபியை* குறிக்கும்.</u>**

கலீஃபதுல் -மஸீஹ் :இந்த வார்த்தை அஹ்மதியா முஸ்லீம் ஜமாத்தால் மஸீஹ்கை பின்தொடர்பவர்களை குறிக்கின்றது( page162 Barahin-e-ahmadiyya Glossary part-1 and II)








Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu




மதிப்புக்குரிய
சகோதரர்களின்



கேள்விகளுக்கு
எங்கள் பதில்

வெளியீட்டு

அமீர்,

ஜமாஅத் தமிழ்நாடு

06.05.2020


PHONE:+917502272774

EMAIL:jusai.tn@gmail.com




ஒன்பதாவது கேள்வி:- திருகுர்ஆன் அடிப்படையில் இவரை நபி என்று நிரூபிக்க முடியுமா ? மதிப்புக்குரிய சகோதரர்- **ஜனாப் அன்ஸார் சாஹிப்.**

**பதில்:**

இந்த கேள்விக்கு ஆடியோ வடிவில் அதாவது திருகுரானில்லிருந்து அன்னாரின் வஹீவாதம்,முஜத்தித் வாதம் மஸீஹ் வாதம் (நபி வாதம்) மற்றும் காலத்தின் இமாம் வாதத்தை பார்த்துவிட்டேன் இன்னும் கேட்க விரும்பும் மக்களுக்காக மீண்டும் ஒருமுறை இன்ஷாஅல்லாஹ் பதிகின்றோம் மேலும் சில ஆதாரங்களையும் உண்மையை தேடும் மக்களுக்காக பதிகின்றோம்.

**அல்லாஹ் அன்னாருக்கு வழங்கிய ஆன்மீகபதவிகள்.**

1. அமீருல் மு..மினீன் - (19 ஜனவரி 2003)
2. ஹஸ்ரத் - (25 ஜூலை 2003)
3. முஸ்லிஹ் மவ்வூத். - (20 பிப்ரவரி 2004)
4. முஹைய்யித்தீன். -(06,07 டிசம்பர் 2004)
5. கலீ..பத்துல்லாஹ். -(26,27 மே 2008)
6. இமாமே இன்கிலாப் -(26,27 மே 2008)
7. மஸீஹ் மவ்வூத். -(10 செப்டம்பர் 2010)

8. முஜத்தித். - (10 செப்டம்பர் 2010)

9. ரஸூலுல்லாஹ். -(அக்டோபர் 2010)

10. நபியுல்லாஹ். -(அக்டோபர் 2010)

**அன்னாரின் உண்மைத்தன்மைக்கு திருக்குர்ஆனின் சான்றுகள்** :

சான்று 1

**அல்லாஹ் (வேதத்தையுடையவர்களிடதில்) எல்லா நபிமார்களின் மூலமும் உறுதிமொழி வாங்கிய நேரத்தை(யும் நினைத்துப் பாருங்கள்). வேதம், ஞானம் ஆகியவற்றிலிருந்து நான் உங்களுக்குக் கொடுத்துவிட்டுப் பின்னர் உங்களிடமுள்ளதை மெய்பிக்கக் கூடிய ஒரு தூதர் உங்களிடம் வந்தால், அவரிடம் நீங்கள் நம்பிக்கை கொண்டேயாக வேண்டும். (மேலும்) நீங்கள் ஒப்புக்கொண்டு என் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று அவன் கூறியதற்கு, ஆம் நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் என்று அவர்கள் கூறினர். இப்பொழுது நீங்கள் சாட்சியாக இருங்கள், நானும் உங்களுடன் சாட்சி(களுள் ஒரு சாட்சி)யாக இருக்கின்றேன் என்றான். (திருக்குர்ஆன் 3: 82 )**

மேலே குறிப்பிடபட்டிருக்கும் வசனத்தின் உடன்படிக்கையை உண்மைப்படுத்தும் விதமாக, அதாவது நம்முடைய கைகளில் இருக்கும் இறைவேதமாகிய திருக்குர்ஆனில் உள்ள அவ்வசனத்தை மெய்ப்பிக்கும் வகையில், அல்லாஹ் அன்னாரை 15ஆம் நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ்வாக நியமித்துள்ளான். 2000யில் இருந்து அன்னாருக்கு இறைச்செய்திகள் கிடைத்து கொண்டிருக்கிறது. அந்த வஹீ செய்திகள் இன்றுவரை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது (அல்ஹம்துலில்லாஹ்) உறுதியாக இவ்வசனத்தின் மீது நாம் நம்பிக்கை கொள்வோமேயானால்? அன்னாரின் வாதங்களை

இவ்வசனத்தின் அடிப்படையில் எவ்வாறு நம்மால் நிராகரிக்க இயலும்..?

சான்று 2

**நாம் நபிமார்கள் எல்லோரிடத்தும், உம்மிடத்தும், நூஹ், இப்ராஹீம், மூஸா, மர்யமுடைய மகன் ஈஸா ஆகியோரிடத்தும் உடன்படிக்கை செய்த நேரத்தை (நினைத்துப் பாரும்). நாம் அவர்கள் எல்லோரிடமும் உறுதிவாய்ந்த உடன்படிக்கை ஒன்றை வாங்கினோம். ( திருக்குர்ஆன் 33: 8 )**

கடந்தக்கால நபிமார்களிடம் உடன்படிக்கை செய்ததுபோன்று, முஹம்மது நபி(ஸல்) அவர்களிடமும் உடன்படிக்கை செய்துள்ளதாக மேலே குறிப்பிட்ட வசனம் மூலம் தெள்ளத் தெளிவாக உறுதியாகிறது. அந்த உடன்படிக்கையின்படி அல்லாஹ்வினுடைய பிரதிநிதிகள் ஒவ்வொரு நூற்றாண்டிலும் வருகை தந்துள்ளனர். அல்லாஹ்வின் தீர்மானங்களில் மாற்றமே இல்லாமல் இருக்கும்பட்சத்தில், அல்லாஹ்வும் அவனுடைய தூதருமாகிய பெருமானார் (ஸல்) அவர்களும் செய்த உறுதிவாய்ந்த உடன்படிக்கையின்படியும், மேலும் இத்திருக்குர்ஆன் வசனத்தை நிரூபிக்கும் வகையிலும், முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களை இந்நூற்றாண்டில் அல்லாஹ் அவனுடைய பிரதிநிதியாக நியமித்துள்ளான். அன்னாரின் வருகைக்கான இரண்டாவது சான்றை இவ்வசனத்தை சமர்பிக்கின்றோம்.

சான்று 3

**இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனைப் பாதுகாப்போம். ( திருக்குர்ஆன் 15: 10 )**

திருக்குர்ஆனின் மொத்த உரிமையாளனும் யாரென்றால், யாவையும் படைத்து பராமரிக்கும் நம் இறைவனாகிய அல்லாஹ்வே ஆவான். ஒருவருக்கு சொந்தமான வீட்டை அவ்வீட்டின் உரிமையாளனே சுத்தம்

செய்து சாயம்பூசி அழகுபடுத்தும் அத்துனை ஏற்பாடுகளையும் செய்கிறான் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்து இருக்க வாய்ப்பில்லை. அதேபோன்று தான் அகில உலக ரட்சகனாகிய அல்லாஹ்வே இந்த அறிவுரையான வேதமாகிய திருக்குரானை இறக்கியதாகவும், அவனே இவ்வேதத்தை பாதுகாப்பதாகவும் நமக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றான். கடந்த 14 நூற்றாண்டுகளும் அதனை உறுதிசெய்துள்ளான். இது அருளுக்குரியவையின் உச்சமாகும். ஏகனுடைய கருணையின் வெளிப்பாடாகும். அந்த அருளே இந்த 15 ஆம் நூற்றாண்டிலும் தொடர்கிறது. முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களை அல்லாஹ் தன்னுடைய பிரதிநிதியாக தேர்வுசெய்த பின் அவனுடைய வேதத்தின் தப்ஸீரை இறைவஹீயின் வாயிலாக அன்னாருக்கு வழங்கி, அது இப்போது "அல் அஸீம் தப்ஸீருல் குர்ஆன்" ஆக ஆக்கம் பெற்றுள்ளது.

அன்னாரின் வருகைக்கு சான்றாக திருக்குர்ஆனின் மூன்றாவது வசனமாக இவையே சமர்பிக்கின்றோம்.

சான்று 4

**அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும், அவன், அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு, அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவார்கள். (திருக்குர்ஆன் 24: 56 )**

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் இவ்வசனத்தின்படி, நம்பிக்கைகொண்டு நற்செயல் புரிபவர்களுக்கு கலீஃபாவை வழங்குவதாக அல்லாஹ்

வாக்குறுதியளித்துள்ளான். கடந்த 14 நூற்றாண்டுகளும் அவ்வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளான். மேலும் அவ்வாக்குறுதியை அதேபோன்று 15ஆம் நூற்றாண்டிலும் ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களை கலீ்ஃபாவாக தேர்வு செய்து நிறைவேற்றியுள்ளான். இவ்வசனத்தின்படி அன்னார் 15ஆம் நூற்றாண்டின் கலீ்ஃபா என்பது ஆணித்தரமான சான்றாகும். மேலும் அல்லாஹ்வின் கலீ்ஃபா என்று இவ்வசனம் சாட்சி பகிர்கின்றது. அன்னாரின் வருகைக்கான நான்காவது சான்றாக இத்திருக்குர்ஆன் வசனத்தை உங்கள் அனைவருக்கும் சமர்பிக்கின்றோம். அல்லாஹ்வின் வாக்குறுதி இந்த 15ஆம் நூற்றாண்டிலும் அன்னாரின் வருகையோடு முழுமையாகிறது.

சான்று 5

**மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்). அவன் வல்லமை மிக்கவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான். (திருக்குர்ஆன் 62: 4 )**

ஒவ்வொரு நூற்றாண்டிலும் மக்களின் ஆன்மீக மற்றும் பௌதீக நிலை சீர்குலைந்து மாறுகின்றனர். அத்தகைய சூழலுக்கு ஏற்ப அல்லாஹ் மனிதர்களில் அவனுடைய பிரதிநிதியை முஹம்மதுநபி(ஸல்) அவர்களின் பிரதிபிம்பமாக தேர்வு செய்கிறான். அதே போன்று இந்நூற்றாண்டிலும் அவனது கலீ்ஃபாவை நியமித்து, மேலுள்ள வசனத்தை மெய்ப்படுத்தியிருக்கிறான். 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹ்மத் (அலை) அவர்களின் ஆன்மீக புதல்வன் என்ற நிலையிலும், வரும் அடுத்தடுத்த நூற்றாண்டுகளில் வரவிருக்கும் இறை பிரதிநிதிகள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்களாக இருப்பதினால், அதன் வாயிலாக வந்துள்ள முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களின் மூலமாகவும் இவ்வசனத்தின் உண்மைத்தன்மை மேலும் நிறைவேறி இருக்கிறது. அன்னாரின் வருக்கைக்கான சான்றாக திருக்குர்ஆனின் ஐந்தாவது வசனமாக இதனை சமர்பிக்கின்றோம்.

சான்று 6

**அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்கள் அல்லாஹ் அருள் புரிந்தவர்களான, நபிமார்கள் (தீர்க்கதரிசிகள்), சித்தீக்குகள் (உண்மையாளர்கள்), ஷஹீதுகள் (உயிர்த்தியாகிகள்),ஸாலிஹீன்கள் (நல்லவர்கள்), ஆகியோரைச் சேர்ந்தவர்களாய் இருப்பார்கள். இத்தகையோர் (மிக்க) நல்ல நண்பர்களாவர். (திருக்குர்ஆன் 4: 70)**

மேலே உள்ள இவ்வசனத்தின் மூலம் அல்லாஹ்வுக்கும், அவனது தூதர் ரஸூலே கரீம்(ஸல்) அவர்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்களுக்கு, ஒவ்வொரு நூற்றாண்டிலும் வரும் புதிய தலைமுறைக்காக, மனிதர்களில் அல்லாஹ் அவனது பிரதிநிதியை ஏற்படுத்துவான். அன்னார் மீது நம்பிக்கை கொள்பவர்களுக்கு, சித்தீக்குகள், ஷஹீதுகள், ஸாலிஹீன்கள் என்ற பதவியில் உயர முடியும் என்பதை இவ்வசனம் நமக்கு எடுத்துரைக்கிறது. அவ்வாறு அல்லாஹ்வையும் அவனது தூதர் (ஸல்) அவர்களையும் பின்பற்றியதன் பலனாக அல்லாஹ் முனீர் அஹ்மத் அஸீம் (அலை) அவர்களை இந்நூற்றாண்டில் தீனை கற்பிப்பதற்காக அவனது பிரதிநிதியாக நியமித்துள்ளான்.

மேலும் இத்திருக்குரான் வசனமும் அன்னார் இந்நூற்றாண்டின் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தீர்க்கதரிசி என சான்று பகிர்கின்றது. இது அன்னாரின் வருகைக்கான ஆறாவது திருக்குரான் வசன சான்றாக நாம் உங்களுக்கு சமர்பிக்கின்றோம்.

சான்று 7

**அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப்**

**பெருநரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம். உங்களுள் எவராலும் அவரை (எம்முடைய தண்டனையிலிருந்து) காப்பாற்ற இயலாது. (திருக்குர்ஆன் 69: 45-48)**

மேலே உள்ள வசனங்களில், அல்லாஹ்விடத்திலிருந்து தனக்கு எந்தவொரு வஹீயும் வராமலிருக்கும்போது, தனக்கு இறைவனிடமிருந்து வஹீ வருகிறது என பொய்யுரைத்தால் அந்நபருக்கு இறைவன் வழங்கும் தண்டனையைப் பற்றி இவ்வசனம் எடுத்துரைக்கிறது. ஆனால் மனிதர்களே கொஞ்சம் சிந்திந்துபாருங்கள், முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்கள் கடந்த 2000ம் ஆண்டிலிருந்து தனக்கு இறைவனிடமிருந்து வஹீ வருவதாகவும் இந்த ஆண்டுவரை (2020வரை) அதுபோன்ற இறைவெளிப்பாடுகள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதாகவும் பகிரங்கப்படுத்துகிறார்கள். அன்னார் அல்லாஹ்விடமிருந்து தனக்கு வஹீ வருவதாக கடந்து 20 ஆண்டுகளாக பொய்யுரைத்து நடிக்கின்றார்களா.? அப்படியென்றால் மேலே உள்ள வசனங்களின்படி அல்லாஹ் அன்னாரின் இந்த பொய்யான நாடகத்தை இத்தனை ஆண்டுகளாக காண்பதில்லையா...? அல்லது அல்லாஹ் இவ்விடயத்தில் ஒன்றும் அறியாதவனாக இருக்கின்றானா...? (நவூதுபில்லாஹ்) இதுபோன்ற வசனங்கள் மூலம் நாம் பெறும் படிப்பினை என்ன என்பதை ஒரு கனம் சிந்தித்து பாருங்கள்..மேலும் மேலே உள்ள இவ்வசனங்கள் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்களின் உண்மைக்கு சிறந்த அசைக்க முடியாத சான்றாக விளங்குகிறது.

Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu




**வெளியீட்டு**

**அமீர்,**

**ஜமாஅத் தமிழ்நாடு**

**17.05.2020**


**PHONE:+917502272774**
**EMAIL:jusai.tn@gmail.com**


**மதிப்புக்குரிய சகோதரர்களின்**



**கேள்விகளுக்கு எங்கள் பதில்**




**பத்தாவது கேள்வி:-** ஒரு மஸீஹை பற்றிதான் திர்குர்ஆனிலும் ஹதீஸிலும் முன்னறிவிப்பு உள்ளது ஆனால் நீங்களோ முனீர் சாஹிபை மஸீஹ் என்று எப்படி கூருகின்றீர்கள? ? கேள்வி கேட்டவர் மதிப்புக்குரிய சகோதரர் - **ஜனாப் அப்பாஸ் சாஹிப் அவர்கள்**

**பதில்:**

அல்ஹம்துலில்லாஹ் இந்த நூற்றாண்டில் நாம் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய மிக இன்றியமையாத ஒரு ஆன்மீக கேள்வியாகும். ஏன்னென்றால் நிசாமிகளின் இந்த கொள்கையை, இந்த காலத்தின் இமாம் ஹசரத் முஹையதீன் அல் கலீபாத்துல்லாஹ்(அலை) அவர்கள் இந்த நிலையை மிகத்தெளிவாக இறுதிநபி கொள்கையின் வேறு வடிவம் என்று கூறுகின்றார்கள். எனவே எந்த நோக்கத்திற்காக நாம் அஹமதியத்தை ஏற்றுகொண்டோமோ இந்த கொள்கையின் மீதும், மேலும் திருக்குரான் எந்த கொள்கையை வழிகேட்டு கொள்கை என்று கூறுகின்றதோ அந்த நிலையை பற்றி இந்த கேள்வி நமக்கு உணர்துவதால், இதன் பதிலை ஒரு உண்மையை தேடும் ஒவ்வொரு சகோதரர்களும் தவறாமல் முழுமையாக படித்து சிந்திக்கவேண்டிய இன்றியமையாத நிலை நமக்கு உள்ளது.(https://sahih-al-islam.blogspot.com/2018/03/khalifatullah-performs-tawaf-in-kaaba.html)

மஸீஹ் ஒருவர் அவர் தோன்றிவிட்டார் என்ற நம்பிக்கை ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்களின் நம்பிக்கையாக இல்லை!!! மாறாக இந்த நம்பிக்கையை அன்னாருக்கு பிறகு தோன்றிய கலீபதுல் ரசூல்மார்களின் காலத்தில் இன்னும் குறிப்பாக கூறினால் மூன்றாவது கலீபதுல் மஸீஹ் அவர்களின் காலத்தில் தோன்றியது(ஆதாரம் ஆங்கில புத்தகம் Khilafat and mujaddidiyyat **பக்கம்** 37)

மேலும் நிசாமிகளால் இன்றளவும் இத்தகைய கொள்கையை இந்த நபிமார்கள் அல்லாத கலீஃபாக்களை தீர்ப்புநாள் வரை கொண்டு செல்வதற்காக ஹசரத் மஸீஹ் அலை அவர்களின் வருகைக்கு பிறகு இந்த

கதவை அடைக்க முயல்கின்றனர். இவர்களின் முரண்பட்ட கொள்கை இப்போது எவ்வாறு உள்ளது என்றால்

**ஒருசாரார் மஸீஹ் இனி வரமாட்டார் ஆனால் நபி வராலம் என்றும் மற்றும் சிலரோ இந்த கடைசி 1000ம் வருடத்திற்க்கு யாரும் வரமாட்டர்கள் ஏன்னென்றால் நம்முடைய ஆதமின் காலம் 7000 வருடம் கடைசியாக தோன்றிய மஸீஹ் தோன்றிவிட்டதால் இனி நபிமார்கள் அடுத்த ஆதாமின் அதாவது மற்றும்மொரு 7000 வருட சுழறச்சியில் போது வருவார்கள் என்று முற்றிலும் ஒற்றுக்கொன்று முரண்பட்ட நிலைப்பாட்டில் உள்ளனர்.**

ஆனால் திருகுரான் இத்தகைய கூற்றுக்களை முற்றிலும் மறுக்கின்றது சகோதரர்களே!!! அல்லாஹ் திருமறையில் மஸீஹ்மார்களின் அதாவது ஹசரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களின் நிழல்களின் வருகையை பற்றி குறிப்பிடும்போது இவ்வாறு கூறுகிறான்.

**"வ ஆஹரீ ன மின்ஹும் லம்மா யல்ஹக்கு பிஹிம்"**

"மேலும் இதுவரை, அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்)". (அல் **ஜுமுஆ** 62:4)

இந்த திருமறை வசனம் பற்றி பெருமானார் ஸல் அவர்கள் இவ்வாறு நமக்கு விளக்குகின்றார்கள்

அபூ ஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :-**நாங்கள் (ஒரு சமயம்) நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது அவர்களுக்கு 'அல்ஜுமுஆ' எனும் (62 வது) அத்தியாயத்தில் 'இன்னும் இவர்களுடன் வந்து சேராமலிருக்கும் ஏனைய மக்களுக்காகவும் (இந்தத் தூதரை அவன் அனுப்பியுள்ளான்)' எனும் (3 வது வசனம் அருளப்பெற்றது. அப்போது, 'அந்த (ஏனைய) மக்கள் யார்? இறைத்தூதர் அவர்களே!' என்று கேட்டேன். நான் மூன்று முறை கேட்டும் அவர்கள் (எனக்கு) பதிலளிக் கவில்லை. எங்களிடையே சல்மான்-அல்-ஃபாரிசீ(ரலி) இருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் சல்மான் மீது தம் கரத்தை வைத்தார்கள். பிறகு, கிருத்திகை (ஸுரய்யா) நட்சத்திரக் குழுமத்தின் அருகில் இறைநம்பிக்கை இருந்தாலும் 'சில மனிதர்கள்' அல்லது 'இவர்களில் ஒருவர்' அதனை அடைந்தே தீருவார்' என்று கூறினார்கள்.**

**அபுல் ஃகைஸ் சாலிம்(ரஹ்) அறிவித்தார் அபூ ஹுரைரா(ரலி) அவர்களின் மற்றோர் அறிவிப்பில், 'இவர்களில் சில மனிதர்கள் இதனை அடைந்தே தீருவர்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இடம் பெற்றுள்ளது.**

**ஸஹீஹ் புகாரி அத்தியாயம் : 65. திருக்குர்ஆன் விளக்கவுரை ஹதீஸ் எண் 4897 மற்றும் 4898**

மேற்கண்ட ஹதீஸின் படி இறுதி காலத்தில் தோன்றும் ஈசா மஸீஹ் பற்றியும் அவர்கள் கடந்த நூற்றாண்டில் பஞ்சாபில் தோன்றிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை அன்னாரின் வஹீ வாதத்தின் அடிப்படையில் அஹ்மதிகளாகிய நாம் ஏற்றுள்ளோம்,

அன்னார் (அலை) அவர்கள் இந்த வசனத்தை பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்

**(மேலும் இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்) என்ற (62:3)**

திருக்குர்ஆன் வசனத்தின்படி பிரதிபிம்பமான முறையில் நான் அதே காத்தமுல் அன்பியாவாக இருக்கிறேன் என்பதை நான் பலமுறையும் கூறியுள்ளேன். மேலும் இன்றிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன் நான் வெளியிட்ட பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலில் என் பெயரை இறைவன் முஹம்மது என்றும் அஹ்மது என்றும் கூறி, எனது வருகையை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வருகை என்றே கூறியுள்ளான்.

ஆனால் காத்தமுல் அன்பியா முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களின் நபிமொழியின் அடிப்படையில் அவர்கள் பலர் என்பதும் காத்தமுள் குலபா ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவ்வாறு தோன்றுவார்கள் அன்னாரின் பிம்பங்கள் என்பதும் இன்னும் விளக்கமாக தோன்றக்கூடியவர்கள் ஒருவரல்ல பலர் என்பதும் அவர்கள் அனைவரும் ஹசரத் முஹம்மது ஸல் அவர்களின் பிம்பங்களாக இருப்பார்கள் என்பதும் தெளிவாகின்றது.

ஆனால் மஸீஹ் மார்கள் ஒருவர்தான் என்ற கொள்கையை நிலைநாட்ட நிஜாமிகள் இந்த நபிமொழியில் உள்ள பலர் என்பது ஹசரத் மஸீஹ் (அலை) அவர்களை பின்தொடரும் கலீபதுல் மஸீஹ்கள் தான் என்ற அடிப்படை ஆதாரம் இல்லாத ஒருநிலைப்பாட்டை முன்வைக்கின்றனர் இதற்காக அவர்கள் தோன்றக்கூடியவர்கள் சல்மான் பார்சி (ரலி) அவர்களின் பௌதிக சந்ததியாக இருப்பார்கள் என்ற இஸ்லாத்திற்க்கு முற்றிலும் ஒரு மாறுபட்ட கருத்தை முன்வைக்கின்றனர்.

ஆனால் சந்ததிகளை பற்றி திருகுரானில் அல்லாஹ் குறிப்பிடும் போது

**நிச்சயமாக உமது பகைவனே ஆண் சந்ததியற்றவன்.**

**( திருக்குர்ஆன் 108: 4 )**

திருக்குர்ஆனின் கருத்துப்படி இறை அறிவிப்பைப்(இறைவஹீயை) பெறும் கூட்டத்தினரே ஆன்மீக சந்ததிகளாவர். அப்படிப்பட்ட ஆன்மீக சந்ததியினரை முஹம்மது நபி (ஸல்) அவர்களாலேயே பெறமுடியும்; அவர்களின் எதிரிகளால் பெற இயலாது, என்பது தெளிவாகின்றது.

மேலும் அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் கூறும்போது

**மேலும் இப்ராஹீம் அவருடைய இறைவன் சில கட்டளைகளைக் கொண்டு சோதித்து, அவற்றை அவர் நிறைவேற்றிய நேரத்தையும் (எண்ணிப் பாருங்கள்). நிச்சயமாக நான் உம்மை மக்களுக்கு இமாமாக்குவேன் என்று அவன் கூறினான். என் சந்ததிகளிலிருந்தும் என்று (இப்ராஹீம்) கேட்டார். (அதற்கு அல்லாஹ் ஆம்! எனினும்) என் வாக்குறுதி அநீதியிழைப்பவர்களைச் சேராது என்று கூறினான். ( திருக்குர்ஆன் 2: 125 )**

இங்கும் அல்லாஹ் இறை செய்தியை ஏற்றுக்கொள்பவர்களே சந்ததியினர் என்று மிகத்தெளிவாக கூறிப்பிடுகின்றான்.

மேலும் இது தொடர்பாக கிலாபதே முஹம்மதிய்யாவின் வது கலீஃபா ஹசரத் மிர்சா குலாம் அஹ்மத் அலை இவ்வாறு நம்மை எச்சரிக்கின்றார்கள்.

**(வ ஆஹரீன மின்ஹும்)**

**(மேலும் இதுவரை அவர்களுடன் சேராத)**

என்ற இந்த (62:4)வசனத்தில் வாக்களிக்கப்பட்டவரின் தோழர்களை தமது சஹாபாக்களாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏன் கூறினார்கள்? மேலும் **பிரதிபிம்பமாகத் தோன்றுதல் என்ற கருத்தை மறுப்பதனால் இவ்வசனம் பொய்ப்படுத்தப்படுகிறது.**

தோன்றக்கூடியவர்கள் பிரதிபிம்பங்களான ஆன்மீக சந்ததிகள் என்பதை மிகவும் அழுத்தமாக இன்னும் அவ்வாறு இல்லை என்றால் இந்த வசனமே பொய்யாகிவிடும் (நஊதுபில்லாஹ்) என்று நம்மை எச்சரிக்கின்றார்கள்

மேலும் இந்த இறைவசனத்தை பௌதீகமாக பொருள் கொள்பவர்களை பார்த்து அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்

பௌதீகமான பொருள் கொள்ளும் மக்கள் வாக்களிக்கப்பட்டவர் ஹஸன் (ரலி) அவர்களின் சந்ததியில் தோன்றுவாரென்றும் ஹுஸைன் (ரலி) அவர்களின் சந்ததியில் தோன்றுவார் என்றும், சிலர் அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்களின் சந்ததியில் தோன்றுவார் என்றும் கூறுகின்றனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்சொன்ன முன்னறிவிப்பைப் பற்றி கொண்டிருந்த கருத்து வாக்களிக்கப்பட்டவர் தங்கள் பிள்ளைகளைப் போல் தங்கள் வாரிசாகவே திகழ்வார் என்பதேயாகும். அதாவது அவர்களின் பெயர்களின் வாரிசாக, அவர்களின் குண இயல்புகளின் வாரிசாக, அவர்களின் ஞானத்தின் வாரிசாக, **அவர்களின் ஆத்மீக தன்மையின் வாரிசாக வாக்களிக்கப்பட்டவர் திகழ்வார் என்பதேயாகும்**. எனவே ஒவ்வொரு வகையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிபிம்பத்தை வாக்களிக்கப்பட்டவர் தன்னுள் காட்டுவார்; அவர் சுயமாக இக்குண இயல்புகளைக் காட்டுவதில்லை. மாறாக எல்லாவற்றையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறமிருந்தே பெறுவார். தாம் அவர்களிலே ஃபனாவாகி (மாய்ந்து, அர்ப்பணமாகி) அவர்களின் முகத்தையே பிரதிபலிப்பவராக திகழ்வார். எனவே அவர் நிழலாக ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் பெயரைப் பெறுவதைப் போன்று, அன்னாரின் பண்புகளை பெறுவதைப் போன்று, **அன்னாரின் ஞானத்தைப் பெறுவதைப் போன்று அவருடைய நபிப்பட்டத்தையும் பெறுவார்.**

சகோதரர்களே! இந்த இடத்தை படித்து ஆழ்ந்து சிந்தியுங்கள் தோன்றக்கூடிய பிம்பமானவர் ஒரு **நபியாக இருப்பார்** என்பது தெளிவாகிறது ஏனென்றால் எந்த ஒரு பொருளின் நிழல் அந்த பொருளாகவே உள்ளது ஒரு மனிதன் நிழல் மனிதனாக உள்ளது ஒரு பறவையின் நிழல் பறவையாக இருக்கிறது. அதே போலவே ஒரு நபியின் நிழல் ஒரு நபியாக இருக்குமே அன்றி நபிமார்கள் அல்லாத கலீபதுல் மஸீஹாகாக இருக்க எவ்வாறு முடியும்? சகோதரர்ரே சற்று சிந்தியுங்கள்!!! ஹசரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் நிழல் அபூபக்கர் (ரலி) அவர்களா? அல்லது மஸீஹ் மஹதியான ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்களா?

மேலும் அன்னார் (அலை) மஸீஹ்காக நபி (ஸல்) அவர்களின் பிம்பங்களாக தோன்றக்கூடியவர்களின் குலம், கோத்திரம் என்று கிறித்தவர்களை போல் கேட்பவர்களுக்கு அழகிய முறையில் தனது நிலையை பற்றி விளக்கியுள்ளார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:-

**இன்னா அஃதய்னாகல் கவ்ஸர்**
**நிச்சயமாக நாம் உமக்கு மிகுதியான நன்மையினை**
**வழங்கியுள்ளோம். (108:2)**




**<u>என்றவசனத்திலும் பிரதிபிம்பமான ஒரு வரைப்பற்றி வாக்களிக்கப்பட்டிருக்கிறது</u>.** அவரது காலத்தில் "**கவ்ஸர்**" என்ற மிகுதியான நன்மைகள் வெளியாகும் எனக்கூறப்பட்டிருக்கிறது. அதாவது ஆத்மீக அருள்களின் நீருற்றுகள் வெளிப்படும். மேலும் அதன் மூலம் உலகில் இஸ்லாத்தை உண்மையாக ஏற்றுக்கொள்பவர்கள் அதிகமாகி விடுவர். இந்த வசனத்திலும் உலகியல் ரீதியான (வெளிப்படையான) சந்ததிகளின் தேவை அற்பமாகக் கருதப்பட்டு பிரதிபிம்பமான சந்ததியைப் பற்றி முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

நான் இஸ்ராயீல் சந்ததியைச் சேர்ந்தவனாகவும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் சந்ததியைச் சேர்ந்தவனாகவும். இருக்கக்கூடிய பாக்கியத்தை இறைவன் எனக்கு வழங்கிய போதிலும், இவ்விரு குடும்பங்களின் இரத்தங்கள் என் நரம்புகளில் ஓடுகின்ற சிறப்பை நான் அடைந்த போதிலும், **<u>நான் ஆத்மீக உறவையே முதன்மையாகக் கருதுகிறேன். எனது பிரதிபிம்பமான தன்மையே இந்த ஆத்மீக உறவாகும்</u>**

எனவே தோன்றக்கூடிய பிம்பமானவர்கள் ஒருவரல்ல பலர் என்பதும் அவர்கள் இறைவஹீயை பெற்று வாதம் செய்யும் ஆன்மீக சந்ததிகளான **கவ்ஸர்**"கள் நபிமார்கள் அதாவது மஸீஹ்மார்கள் என்பதும் தெளிவாகின்றது.

இவ்வாறு பிம்பமானவர்கள் அதாவது மஸீஹ் மார்கள் ஒருவர் அல்ல என்பதற்கு ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்களின் போதனைகளில் இருந்தும் பல்வேறு சான்றுகள் உள்ளது

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:-**

முஹம்மது (ஸல்) அவர்கள் ஒரு முறையல்ல; **<u>ஆயிரம் முறை உலகில் பிரதிபிம்பமாகத் தோன்றுவதும்,</u>** பிரதிபிம்பமான முறையில் வேறு பல முழுமை பெற்ற தன்மைகளுடன் தமது நுபுவ்வத்தை வெளிப்படுத்துவதும் சாத்தியமேயாகும்.

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்:-

**நிழலான /பின்பமான மஸ்ஸிஹ்கள் ஆகப் பலர் வரலாம் -இதுவும் எனது தனிப்பட்ட கருத்தில்லை பெருமதிப்புக்குரிய நபிமார்களின் பரப்பரியத்தின் சாரம் இதுவே ஆகும்.கியாமத் நாள் வரை தஜ்ஜால்கள் வரமுடியும்.இவ்வாறு 30 தஜ்ஜால்கள் உலகில் தோன்றக்கூடும் "லீ குல்லி தஜ்ஜாலின் ஈஸா " என்ற நபி மொழிக்கு ஏற்ப குறைந்தது 30 மஸிஹ்கள் வருவார்கள். பிற மஸீஹ்கள் பின்வரும் காலத்தில் தோன்றுவார்கள். இவை அனைத்தும் நிச்சயம் சாத்தியமே.மேலும் அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வாதம் செய்பவன் நானே. ஆனால் நான் ஒருவனே மஸீஹ் என்றும் நானே முதலாவது மற்றும் கடைசி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் வாதம் செய்யவில்லை. என் பார்வையில் எனக்கு பிறகு 10000 க்கு மேற்பட்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹ்கள் வருவார்கள்,நான் இந்த காலத்திற்கு மட்டுமே மஸீஹ் ஆக உள்ளேன்.**(Isaalaye Auhaam, p.197)

அதாவது பல மஹ்திகள் (இதற்கு) முன்னர் வந்திருக்கலாம் என்றும் ஒரு வேளை எதிர்காலத்திலும் அது போல வருவார்கள் என்றும் இனிமேலும் இமாம் முஹம்மது என்ற பெயரைக் கொண்ட எவராவது கூடத் தோன்றுவதற்கான சாத்தியமுள்ளது என்பதையும் நாம் ஒப்புக் கொள்கிறோம்.( ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 379)

எதிர்காலத்திலும் எண்ணற்ற மஸீஹ்கள் வருவது சாத்தியமே. பத்தாயிரத்திற்கும் அதிகமான மஸீஹ்கள் வருவதற்கும் அவர்களுள் எவரேனும் **ஒருவர் டமாஸ்கஸில்** இறங்குவற்கும் சாத்தியம் உள்ளது. .( Isaalaye Auhaam ,ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 251)

இன்னும் அன்னார் தன்னை போன்ற “**மஸீஹ்லே மஸீஹ்**” பற்றியும் குறிப்பிட்டு கூறுகின்றார்கள்

“அநேகமாக வேறு சில மஸுஹ் மவூதும் இருக்கலாம் என்பதை என்னால் மறுக்கவும் முடியாது ;மேலும் நான் அதனை மறுக்கவும் மாட்டேன்”.( (Majmooa Ishteharat, vol. 1, p. 207)

“அதாவது எனக்கும் கூடுதலாக மற்ற சில மஸுஹ் போன்றவர்(களும்) வரக்கூடும் என்பதையும் நான் மறுக்கவில்லை” . (Majmooa Ishteharat, vol. 1, p. 208)

**மேற்கண்ட ஹஸ்ரத் மஸீஹ் மவூது (அலை) கூற்றுக்கள் மஸீஹ் ஒருவர் அல்ல, பலர் என்று தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கும் போது இக்கால அஹ்மதிகள் இந்த கூற்றுக்களுக்கு என்ன மதிப்பளித்தார்கள் என்பதற்கு அவர்கள் இதனை தன் முதுகிற்கு பின்னால் தூக்கி எறிந்து விட்டார்கள் என்பதே கசப்பான உண்மையாகும்.**

**இன்னும் இது தொடர்பாக இந்த நூற்றாண்டில் இறைபுரத்தில்லிருந்து அருளாக தோன்றிய இக்காலத்தின் மஸீஹ் கிலாபதே முஹம்மதியாவின் வது 14 கலீ:பா ஹசரத் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் இவ்வாறு வாதம் செய்கின்றார்கள்**



வாக்களிக்கப்பட்ட மஸீஹான, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் அழகை வெளிக்காட்டுவதற்காகவும், அல்லாஹ், மற்றும் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் மீது அன்னாருக்கு இருந்த அற்புதமான உறவைக் குறித்து எடுத்துக் காட்டுவதற்காகவும் வந்தார்கள். அதாவது, நபி பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றாதிருக்கும் பட்சத்தில், அன்னாரின் நபித்துவ வாதம் ஏற்கத்தகுந்ததாக இருக்காது. அதாவது, எந்தவொரு நபியும் திருக்குர்ஆனின் சட்டத்தை மாற்றி அமைப்பதற்கோ, மற்றொரு ஷரியத்தின் இறை வேதத்தை நடைமுறைப் படுத்துவதற்கோ தோன்ற இயலாது. அன்றியும் எந்தவொரு நபியும், மாநபி பெருமானார் முஹம்மது முஸ்த:பா (ஸல்) அவர்களைப் போன்ற சிறப்புடனும், கம்பீரத் தோற்றத்துடனும், பரிபூரணத் தன்மையுடனும் இனி வரப்போவதில்லை. எனினும், அல்லாஹ், மற்றும் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் அன்பிற்காக, தங்களை முழுமையாக அர்ப்பணிக்கின்ற இது போன்ற நபிமார்கள் வருவார்கள் என்பது ஒரு மறுக்க இயலாத உண்மையாகும். அவ்வாறு வரும் இந்த நபிமார்கள், மனிதர்களிலும் நபிமார்களிலும் எல்லாம் சிறந்தவரான நபி பெருமானார் (ஸல்) அவர்களுடைய முழுமையான பிரதிபலிப்பாக(நிழல்களாக) வருவார்கள். இவ்வாறு வரும் இச்சிறிய முஹம்மதுகள், இறுதிக் காலத்தில் பரவும் இருளை அகற்றுகின்ற ஒளி விளக்குகளாக இருப்பார்கள். மேலும், எல்லா மார்க்கங்களைச் சேர்ந்த மக்களையும், அதாவது முஸ்லிம்கள் உட்பட அனைவரையும் இஸ்லாம், மற்றும் அவர்கள் பிறந்த உண்மையான மார்க்கத்தின் பக்கம் மீண்டும் திரும்ப செய்வார்கள். நிச்சயமாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹான, மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள், **" Ek-Ghalati-Ka-Izala"** (ஒரு தவறான **எண்ணம் அகற்றப்பட்டது**) என்ற தனது புத்தகத்தில் கூறியுள்ளதாவது:

"சுருக்கமாக, **"காத்தமுன்னபிய்யீன்"** என்ற சொல்லிற்கு, **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நுபுவ்வத்தின் மீது இருக்கின்ற அந்த ஏக இறைவனின் முத்திரையாகும் இந்த முத்திரை ஒருபோதும் உடைந்துபோக சாத்தியமே இல்லை ஆயினும் நமது கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை அல்ல ஆயிரம் முறை உலகில் பிரதிபிம்பமாக தோன்றுவதும். பிரதிபிம்பமான முறையில் வேறு பல முழுமை பெற்ற தன்மைகளுடன் தமது நுபுவ்வத்தை வெளிப்படுத்துவதும் சாத்தியமேயாகும்**. இந்த பிரதிபிம்ப நிலை இறைவன் புறத்திலிருந்து நியமிக்கப்பட்ட ஒரு பதவியை ஆகும்

இதை பற்றி இறைவன் திருமறையில் கூறும்போது

**"வ ஆஹரீ ன மின்ஹும் லம்மா யல்ஹக்கு பிஹிம்"**

"மேலும் இதுவரை, அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்)". (அல் ஜுமுஆ 62:4)

பிரதிபிம்பமாக தோன்றுபவர்கள் குறித்து நபிமார்களுக்கு எந்தவிதமான குறையும் ஏற்படுவதில்லை எனினும் நபிமார்களின் தோற்றமாகவும் அவர்களின் உருவமாகவே திகழ்வார்கள். ஆனால் இவர்களை தவிர வேறு யாரும் வருவதால் (சுதந்திரமாக) அவர்களுக்கு நிச்சயமாக அவமானம் உண்டாகும்.

மேலும் அல்லாஹ், எல்லா நாடுகளுக்கும் முன் சென்ற காலங்களிலும் நபிமார்களையும், தூதர்களையும், மஸீஹ்மார்களையும், சீர்திருத்தவாதிகளையும் அனுப்பியுள்ளான். இவ்வாறு இருக்க தற்போது மட்டும் இறைவன், இவ்வுலகில் வாழும் புதிய தலைமுறை மக்களுக்காக, இனி நபிமார்கள், மற்றும் சீர்திருத்தவாதிகள் யாரையும் அனுப்பமாட்டான் என்று கூறுவதும் , அல்லாஹ் பேசுவதையே நிறுத்திவிட்டான் என்று கூறுவதும் உங்களுக்கு விவேகமுள்ள செயலாக இருக்கின்றதா? சற்று சிந்தியுங்கள் எனது அருமையானவர்களே! அதாவது, அவர்களை இறைவனிடமிருந்து வந்த ஒரு எச்சாரிக்கையாளரோ, அல்லாஹ்வின் ஒரு தூதரோ வரவில்லை என்றால், அவர்களின் தவறான வழிகளின் காரணமாக, அவர்களை குற்றம் சுமத்த எவ்வாறு முடியும்? நிச்சயமாக, அல்லாஹ் தனது படைப்பினங்களிடையே ஒருபோதும் அநியாயமாக நடந்து கொள்வதில்லை. இந்த பூமியில், ஒரு மனிதர் கூட இல்லாத அந்த நாள் வருகின்ற வரையிலும், அல்லாஹ்வின் நபிமார்கள் தொடர்ந்து வந்துக்கொண்டே தான் இருப்பார்கள். அதாவது, மக்களை அவர்களின் செயல்களின் காரணமாக எச்சரிக்கை செய்வதற்காகவும், இஸ்லாத்தின் (அல்லாஹ்வின் பக்கம் முழுமையாக கீழ்படிதல்)

பக்கம் மீண்டும் அவர்களைக் கொண்டு வருவதற்காகவும் தொடர்ந்து வந்து கொண்டேதான் இருப்பார்கள். எங்கெல்லாம் மக்களும், நாடுகளும் இருக்கின்றதோ, அங்கெல்லாம் மக்களை எச்சரிக்கை செய்ய எச்சரிக்கையாளர்கள் வருவார்கள். அன்றியும், அவர்கள் தங்களை சீர்திருத்தம் செய்யவேண்டும் என்ற காரணத்தினால், அல்லாஹ்வின் நேசம், மற்றும் கருணைக்கான நற்செய்தியை வழங்குவதற்காகவும், தற்காலிக தங்குமிடமான இப்பூமியில் யாரும் உயிருடன் இல்லாதிருக்கின்ற வரையிலும், அல்லாஹ்வுடைய நாட்டத்தை இப்பூமியில் நிறைவேற்றுவதற்காகவும் அவர்கள் வருவார்கள்.

அல்லாஹ், தனது நேசத்திற்குரிய, மிகவும் பரிபூரண அடியாரும், போற்றதக்க மனிதருமான, காத்தமுன் நபீயீன் முஹம்மது முஸ்த்ஃபா (ஸல்) அவர்களை வாழ்க்கையின் வழிமுறையான இஸ்லாத்துடனும், முழுமையான மார்க்கத்துடனும் இவ்வுலகிற்கு அனுப்பி அருள்புரிந்துள்ளான். இதன் மூலம் இவ்வுலகம், அன்னாரது இருப்பிற்கு ஏற்றார் போன்று தங்களது இருப்பை வடிவமைப்பதற்கும், அன்னாரை அச்சில் வார்த்தார் போன்று நடப்பதற்கும், அன்னாரது பிரதிபலிப்பாகவும் (புரூஸாக), நிழலாகவும் (ஜில்லியாகவும்) நடப்பதற்கும், ஒரு முழுமையான முன்மாதிரியை பெற்றுள்ளது என்பதே ஒரு பெரும் அடையாளமாகும். அன்றியும், நபி பெருமானார் (ஸல்) அவர்களின் பிரதிபிம்பமாக பலர் வருவதன் மூலம், இஸ்லாத்தின் மகிமை பிரதிபலிக்கப்படுகின்றது. எனினும் இவ்வுலகிற்கு வருவதற்கு முன்பே, அல்லாஹ், அவர்களில் யாரை இஸ்லாத்தின் சீர்திருத்தவாதிகளாகவும், அல்லாஹ்வுடைய நபிமார்களாகவும் நியமித்து தூய்மைப்படுத்தியுள்ளானோ , நிச்சயமாக அவர்களே உண்மையான நற்பேறு பெற்றவர் ஆவார்கள். இவ்வாறான நபிமார்களே, உலக நாடுகளிலுள்ள மக்களிடையே இஸ்லாம், மற்றும் அதன் உண்மையின் ஒளிவிளக்கை ஏந்தி வருபவர்களாக இருப்பார்கள். இதுவே, நிச்சயமாக பழைய நாடுகளுக்கும், தற்போதைய நாடுகளுக்கும், வருங்கால நாடுகளுக்கும் இடையே உள்ள மிக முக்கியமான வித்தியாசமாகும். கடந்தகாலங்களில் உள்ள நாடுகளும் இவ்வாறான நபிமார்களையே பெற்றுள்ளது. இப்படிப்பட்டவர்களே, மனிதகுலத்தின் சிறப்பான பிறப்பாக உள்ள நபி பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தையும், அன்னாரது சிறப்புக்களையும் முன்னறிவிக்க வந்தவர்கள். அப்படியிருக்க, தற்போதைய நாடுகளைச் சேர்ந்த நமக்கு மத்தியிலும், வருங்கால நாடுகளுக்கு மத்தியிலும் நபிமார்கள் தோன்றும் போதெல்லாம், நாம் அந்த முழுமையான மாமனிதரைப் பரிசுத்தப்படுத்துவதற்கும், மற்றவர்கள் அவரை அவமானப்படுத்தும் போதெல்லாம், அவரது கண்ணியத்தை மீண்டும் அவருக்காக ஏற்படுத்தி தருவதற்கும் நாம் முயற்சி செய்யவேண்டும். அல்லாஹ்வின் கடுங்கோபம் அவர்களை சூழ்ந்துக் கொள்ளும்போது, அவமானப்படுத்துபவர்களும், அவர்களது அவமானங்களும் அவர்களுக்கு எந்த பலனும் அளிக்காது. ஏனெனில், என்ன நிகழ்ந்தாலும், அல்லாஹ் தனது நபிமார்களின் கண்ணியத்தை எப்போதும் பாதுகாப்பவனாகவும், இரட்சிப்பவனாகவும் இருக்கின்றான்.

அன்றியும், வாக்களிக்கப்பட்ட மஸீஹான, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள், **" Ek-Ghalati-Ka-Izala"** (ஒரு தவறான **எண்ணம் அகற்றப்பட்டது**) என்ற தனது புத்தகத்தில் இன்னும் கூறியுள்ளதாவது:


"அதாவது இறுதி நாள் வரை நபித்துவத்தின் முத்திரை ஹஜ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தோற்றமாகவே விளங்குகின்ற, அவர்களின் பிரதிபிம்பமாகவே இருக்கின்ற வரை தவிர வேறு எவராலும் **நபிமார்களை போன்று இறைவனிடமிருந்து தெளிவான எந்த மறைவான ஞானத்தை பெற முடியாது**, அந்த பிரதிபிம்பமானவர் ஹஜ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உருவமாகவே இருப்பதால் அத்தகையவரே இதை பெற முடியும், இதன் படி முற்காலத்திலிருந்தே முஹம்மதின் பிரதிபிம்பமாக வாக்களிக்கப்பட்டவன் நான் இருக்கிறேன். எனவே பிரதிபிம்பமான முறையில் எனக்கு நுபுவத் அளிக்கப்படுகின்றது. தற்போது முழு உலகமும் முத்திரை இடப்பட்ட இந்த நுபுவ்வத்தின் முன் நிற்க எவருக்கும் சக்தியில்லை .முஹம்மதின் முழுமையான தன்மை கொண்ட முஹம்மதின் பிரதிபிம்பமானவர் பிற்காலத்தில் தோன்றுவார் என்பது முன்னரே விதிக்கப்பட்டிருந்தது. அதன்படி அவர் தோன்றி விட்டார் **இப்பொழுது இந்த வாசல் வழியாக இல்லாமல் வேறு எந்த வழியிலும் நுபுவ்வத்தின் ஊற்றிலிருந்து நுபுவ்வத்தின் தண்ணீரை அருந்த முடியாது.**

மேலும், உண்மையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹான, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களே, காத்தமுன் நபீயீன் முஹம்மது முஸ்த ஃபா (ஸல்) அவர்களின் அத்தகைய பிரதிபலிப்பாகவும் (புரூஸாக), நிழலாகவும் (ஜில்லியாகவும்) தனது காலத்தில் தோன்றியுள்ளார்கள். மேலும், நிச்சயமாக அல்லாஹ் அன்னாருடைய ஜமாத்தை அருளுக்குரிய ஜமாஅத்தாக விருப்புகின்றான் எனவே அவன் இந்த அருளுக்குரிய ஜமாத்திலிருந்து இஸ்லாத்தின முக்கியத்துவமான முஹம்மதுகளையும் குலாம் அஹ்மத்துகளையும் எழுப்புவதாக வாக்குறுதியளித்துள்ளான்.. இவர்களே, அல்லாஹ்வின் இந்த அருளுக்குரிய அடியார்களின் கண்ணியத்தையும், தூதர்களின் கண்ணியத்தையும் உயிருடன் வைத்திருக்கக்கூடியவர்கள். இவ்வாறான மனிதர்களே, இம்மையாயினும், மறுமையாயினும், இரட்சிப்பிற்கான வாசலை திறக்க வந்த திறவுகோலாகவும் பிரதிபலிப்பார்கள். இது எவ்வாறு ஏற்படுகின்றது என்றால் அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது இருக்கும் மறுக்கயியலாத அன்பின் காரணமாகவும், அல்லாஹ்வின் நபிமார்களுக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்படும் நெருக்கமான பந்தத்தின் காரணமாகவும் ஆகும். நிச்சயமாக, வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ்

மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வின் மீதும், அவனது நேசத்திற்குரிய தூதரான, மனிதர்களிலும், நபிமார்களிலும் சிறந்தவரான ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் மீதும் இருக்கும் அன்பு உண்மையில் எல்லையற்றதாகும்.

அல்லாஹ், பிற்காலத்திற்கான வழிதவறிய நாடுகளுக்கு வழிக்காட்டுவதற்காக, இஸ்லாத்தை உள்ளத்தில் பாதுகாக்கக்கூடிய தனது இறையச்சமுள்ள நபிமார்களைக் கொண்டு மனிதகுலத்திற்கு அருள்புரிவானாக ஆமீன், ஸும்மா ஆமீன். **ஆதாரம்**: http://www.jamaat-ul-sahih-al-islam.com/jusai2016/fseng_25mar16.pdf

**மேலும் அன்னார் கூறும்போது ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் தோன்றிய கடைசி மஸீஹ்ஹல்ல மாறாக அன்னார் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவித்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ்ஹில் முதன்மை யானவர் ஹஸ்ரத் மிர்சா குலாம் காதியானி (அலை) அவர்கள் இதற்கு முன்னால்** உள்ளவர்கள் வாக்களிக்கப்பட்டவர்களாக அதாவது அவர்களை பற்றி எந்த ஒரு முன்னறிவிப்பும் ஹதீதில் இருக்காது இதன் அர்த்தம் **வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறுதியானவர்கள் அல்ல** மாறாக அன்னார் முஹம்மதிய மஸீஹ் மார்களின் வருகையின் கதவை திறப்பதற்காக வந்துள்ளார்கள் என்று அல்-கலீ.ஃபதுல்லாஹ் முனீர் அஹ்மத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் (**ஆதாரம்**: http://sahih-al-islam.blogspot.com/2013/03/the-elixir-of-truth-in-divine-prophecies.html)



**முஜத்தித் மற்றும் கலீபாக்களின் வருகை கியாமத் நாள் வரை தொடரும்**

(மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) )

அல்லாஹ் **கலீஃபாக்களின் காலத்தை (வருகையை) கியாமத் நாள்வரை நீட்டித்துள்ளான், இது இஸ்லாத்திற்குறிய ஓர் அருளும் (கண்ணியமும்) சிறப்புமாகும்**. அதன் உதவிக்காகவும், சீர்திருத்ததிற்காகவுமே ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜதித்கள் வருகை தந்தனர். மேலும் **எதிர்காலத்திலும் தொடர்ந்து வருகை தருவார்கள்**. பாருங்கள்!, சர்வ வல்லமையுள்ள அல்லாஹ் 'كما' என்ற வார்த்தையிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளபடி புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடன் ஒப்பீடு செய்துள்ளான். "நான் கடைசி செங்கலாக இருக்கிறேன்" என்று ஹஸ்ரத் ஈஸா நபி அவர்களே கூறியுள்ளபடி, (ஈஸா நபி) அவர்களே மூஸா நபியின் ஷரீயத்தில் கடைசி கலீஃபாவாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷரீயத்திலும் அது போன்றே அதன் (ஷரீயத்தின்) சீர்திருத்தம் மற்றும் சேவைக்காக, கலீஃபாக்கள் எப்போதுமே வந்து கொண்டிருந்தார்கள். **மேலும் கியாமத் நாள் வரை தொடர்ந்து வந்து கொண்டிருப்பார்கள்.** இவ்வாறாக, அவரது ஒப்புவமை மற்றும் அவருக்கு ஒதுக்கப்பட்ட பணியின் அடிப்படையிலேயே கடைசி கலீஃபாவுக்கும் மஸீஹே மவூத் (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) என்று பெயர் வழங்கப்பட்டது.

(மல்பூஸாத் தொகுதி 10 பக்கம் 262)

**இதையே மஸீஹ் அலை அவர்கள் தன்னை பற்றி கூறும்போது "நான் இந்த விதையை என் கையால் விதைப்பவராக வந்துள்ளேன் என்று நமக்கு போதித்துள்ளார்கள்**" (ஆதாரம் :Tadhira-tus-Shahadatain, pp. 64-65)இங்கே கவனிக்கத்தக்கது என்னவென்றால் அவர்கள் தம்மைப் பற்றி 'கடைசி .ஃகலீ.ஃபா மஸீஹே மவூத்' என்று கூறியதன் பொருள் அவர்கள் .ஃகாத்தமுல் .ஃகுல.ஃபா(.ஃ .ஃகலீ.ஃபாக்களில் தலை சிறந்தவர்) என்ற பதவியினாலும், மஸீஹின் வாசலைத் திறப்பதற்காக வருகை தந்ததாலுமே

அவ்வாறு கூறியுள்ளார்கள்.அவ்வாறு இல்லை என்றால் ‘தனக்குப் பிறகும் கூட ஃகலீஃபாக்கள் ‘கியாமத் நாள் வரை தொடர்ந்து வந்து கொண்டிருப்பார்கள்’

பெருமானார் ஸல் அவர்களின் முன்னறிவிப்பு படி அன்னாருக்கு மஸீஹிக்கும் இடையில் நபி இல்லை மஸீஹ் (ஒரு நபியுல்லாஹ்) மற்றும் அல்லாஹ்வின் கலிபா என்பதை நாம் அறிந்ததே[min ba‘di]. (Al-Mu’jam Al-Ausat, by Hafiz Tibrani)

எனவே மிகத்தெளிவாக மஸீஹ் நபி ஸல் அவர்களின் கிலாபாத்தில் அதாவது கிலாபதே முஹ்மதிய்யாவின் இறுதி கலீபா ஆவார் ஆனால் அவர் ஒருவர் அல்ல அதாவது இனி தோன்றக்கூடியவர்கள் மஸீஹ்காகவும் நபியாகவும் இருப்பார்கள் என்பதே உண்மை இது அனைத்தும் ஒரு சங்கிலி தொடர்போல் உள்ளது இதில் இருந்து மஸீஹ் ஒருவர் என்று கூறினால் அது திருக்குரான் போதனைக்கு மாற்றமான இறுதிநபி கொள்கையாகும்

**இதற்கு முன்னர் யூஸுஃப் தெளிவான சான்றுகளுடன் உங்களிடம் வந்தார். ஆனால் அவர் உங்களிடம் கொண்டு வந்தது குறித்து நீங்கள் ஐயப்பாட்டிலேயே இருந்தீர்கள். அவர் மரண மடைந்த போது, அவருக்குப் பின்னர் எந்தத் தூதரையும் அல்லாஹ் ஒருபோதும் அனுப்ப மாட்டான் என்று நீங்கள் கூறினீர்கள். இவ்வாறே அல்லாஹ், வரம்பு மீறுபவர்களாகவும், ஐயம் கொள்பவர்களாகவும் இருப்பவர்களை வழி தவறியவர்கள் என்று (முடிவு எடுத்துக்) கொள்கிறான்.(திருக்குர்ஆன் 40: 35 )**

எனவே பலர் அல்ல ஒருவர் என்பது கடைசி நபி கொள்கையின் மறு வடிவமே ஆகும்.ஹஜ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சமூகம் எல்லா சமூகங்களை விட சிறந்ததாகும் ஆனால் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களது உம்மத்தில் அன்னாரின் நிழலாக பலர் தோன்றி இருக்க கைருல் உம்மத்தான இந்த முஹம்மதிய்ய உம்மத்தில் ஒரே ஒரு மஸீஹ் தான் கியாமத் வரை என்றால் இது மூஸா (அலை) அவர்களது உம்மத்தை விட எந்த வகையில் சிறந்த சமூகம் என்பதற்கு இக்கொள்கையை கொண்டவர்கள் விளக்குவதற்கு கடமைப்பட்டுள்ளார்கள்.

**முஸ்லிம்கள் நபி (ஸல்) இறுதியானவர் என்றும் வானத்திலிருந்து ஈஷா (அலை) வானத்திலிருந்து இறங்குவர் ஆனால் அவர் நபியாக இருக்கமாட்டார் என்று கூறுவதை போல் இப்போது நிஜாமிகள் மஸீஹ் இறுதியானவர் இனி வரக்கூடியவர்கள் நபிமார்கள் அல்லாத கலீபதுல் ரசூல்மார்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனபதே நிதர்சனமான உண்மை!!!**

**சிந்திக்கும் மக்களுக்கு நிச்சயமாக இதுஒரு பெரும் எச்சரிக்கையாக இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை!!!**

**உங்களுக்கும் எங்களுக்கும் இந்த உண்மையை அறிந்துகொள்ளும் வாய்ப்பை அந்த ஏக இறைவனாகிய அல்லாஹ் வழங்குவானாக ஆமீன்**

Jamaat Ul Sahih Al Islam - Tamil Nadu




மதிப்புக்குரிய
சகோதரர்களின்



கேள்விகளுக்கு
எங்கள் பதில்

வெளியீட்டு
அமீர்,
ஜமாஅத் தமிழ்நாடு
19.05.2020


PHONE:+917502272774
EMAIL:jusai.tn@gmail.com



**பதினொன்றாவது கேள்வி:-** எனது கேள்வி (இன்னிமாக்கா யா மஸ்ரூர்) என்ற முன்னறிவிப்பின் படி தற்போது 5 வது கலீபா உள்ளார் என்று அஹமதியா ஜமாத்தின் வாதம் நீங்கள் இந்த முன்னறிவிப்பு யாருக்கு பொருந்துகிறது என்பதை என்று கூருகின்றீர்கள் கேள்வி கேட்டவர் மதிப்புக்குரிய சகோதரர் -**ஜனாப் ஜனாப் ராஜா சாஹிப் அவர்கள்**

**பதில்:**

*இன்ஷாஅல்லாஹ் முதலில் இந்த இறைவஹீயை பற்றி பார்ப்போம் இந்த வஹீ ஹசரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு 1907 ம் ஆண்டு இறங்கிய தொடர்ச்சியான வஹீயில் மூன்றாவதாக இறங்கிய அரபு மொழிலனான வஹீயாகும். **இதன்** அர்த்தம் அல்லாஹ் சுபஹானஹுதாலா ஹசரத் மஸீஹ் மவூது (அலை )அவர்களை பார்த்து*

"***மகிழ்ச்சிக்குரிய ஒருவரே நான் உம்முடன் இருக்கிறேன் என்பதாகும்***"

**(இன்னிமாக்கா யா மஸ்ரூர்)**

**[Badr, vol. 6, no. 35, August 29, 1907, p. 4 and al-Hakam, vol. 11, no. 31, August 31, 1907, p. 1]**

***இதே நாளில் அன்னாருக்கு இறக்கிய இறைவஹீயில் அல்லாஹ் அன்னாரை பார்த்து***

***"இன்னிமாக்கா யா இப்ராஹிம்"***

***என்றும் அழைத்துள்ளான்.***

***மேலும் இந்த வஹீ அன்னாருக்கு பல முறை இறங்கி உள்ளது***

**[Arabic] I am with you, O Ibrahim** **[al-Badr, vol. 7, no. 3, January 23, 1908, p. 4 *and* al-Hakam, vol. 12, no. 6, January 22, 1 1908, p. 10]**


*மேலும் அன்னாருக்கு இவ்வாறும் வஹீ இறங்கியுள்ளது அதாவது*

"***நான் உன்னை விரும்புகிறேன் நான் உன்னுடன் இருப்பேன்***" *என்று*

**"I love you. I am with you".**

**[Barahin-e-Ahmadiyyah, part 4, pp. 480–481 sub-footnote 3,**
**Ruhani Khaza'in, vol. 1, pp. 571–572 sub-footnote 3]**

ஆக இந்த அனைத்து வஹீகளும் அல்லாஹ் அன்னாரை பார்த்து கூறியதாகும். அல்ஹம்துலில்லாஹ் மேலும் இப்போது நிஜாமிகள் இந்த வஹீயை கலீபதுல் மஸீஹ் மிர்சா மஸ்ரூர் அஹ்மத் சாஹிப் அவர்களுக்கான முன்னறிவிப்பு என்று கூறுகின்றனர். அல்ஹம்துல்லாஹ் நமக்கு எந்த ஒரு மாற்றுக்கருத்தும் இல்லை, ஆனால் இது எனக்கான முன்னறிவிப்பு என்று யார் கூறவேண்டும்? என்பதே நமது கேள்வியாகும்?



ஒருவேளை மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறங்கிய அந்த வஹீ இன்னும் குறிப்பாக ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்களை பார்த்து அல்லாஹ் கூறிய அந்த வஹீ என்னுடைய வருகையின் முன்னறிவிப்பு என்று அல்லாஹ் கூறினான் என்று மிர்சா மஸ்ரூர் சாஹிப் அவர்கள் கூறியுள்ளார்களா? அல்லது இந்த நிஜாமிகளின் சொந்த கூற்றா? என்பதேயாக்கு!!!

## அல்லாஹ் திருகுர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்

அந்த இரவை அது மூடிக் கொள்ளும் போது சான்றாகக் காட்டுகிறேன். அந்தப் பகலை அது ஒளி வீசும் போது சான்றாகக் காட்டுகிறேன். ஆணையும், பெண்ணையும் படைத்ததை சான்றாகக் காட்டுகிறேன்.( திருக்குர்ஆன் 92: 2-4 )

"Procreation of man depends upon the coming together of two individuals of opposite sexes. The characteristic quality of the one the (male) is to give and of the other (the female) is to receive. Like the physical world, **there are in the spiritual world, males- God's great prophets and Divine Reformers-** who teach and guide, and there are also spiritual females- their followers- who receive and benefit by the Divine Teaching. The verse embodies a hint that by coming together of the perfect Teacher-the Holy Prophet- and the ideal pupils- his Companions- **a new world is about to be born**". **(HQ, 92: 2-4, pp. 2835)**

முஜத்தித்மார்களும் நபிமார்களுமே வாதம் செய்யும் ஆன்மீக ஆண்கள் என்றும் மற்றவர்கள் அனைவரும் பெண்கள் என்று அழைக்கப்டுகின்றார்கள், ஏனென்றால் அவர்கள் அனைவருமே முஜாதித்தமர்களுக்கும் நபிமார்களுக்கும் இறக்கும் வஹியை பெறக்கூடியவர்களாக உள்ளார்கள் என்று தெளிவாக விளங்குகின்றது அதாவது முஜத்தித்மார்களும் ,நபிமார்களுமே ஆன்மீக ஆண்கள் அதாவது வாதம் செய்யும் ஆன்மீக சந்ததி என்று தெளிவாக ஹசரத் முஸ்லிஹ் மவூது (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

எனவே கலிபதுல் மஸீஹ் அவர்கள் இது தனக்கான முன்னறிவிப்பு என்று வாதம் செய்யாத போது நிஜாமிகள் எவ்வாறு வாதம் செய்ய முடியும்? இதற்கு காரணம் இறைவஹீயை பற்றியான அடிப்படை ஞானம் இல்லாததே ஆகும்.

இன்னும் சிலரோ கலீபதுல் மஸீஹ் அவர்களுக்கு இறைஅறிவிப்பு கிடைக்கிறது ஆனால் அவர் வெளியே சொல்லமாட்டார் என்றுகூறுகின்றனர். இத்தகைய கூற்றும் திருகுர்ஆனுக்கு மாற்றமான கருத்தாகும் சகோதரர்களே!!! இன்னும் கூறப்போனால் **இது ஒரு பாவமாகும்.**

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

**அவன் வானவர்களை "வணக்கத்திற்குரியவன் என்னைத் தவிர வேறு எவனும் இல்லை. எனவே எனக்கே அஞ்சுங்கள்" என எச்சரிப்பீராக என்ற வஹியுடன், அடியார்களுள் தான் விரும்பியோரிடம் தன் கட்டளை மூலம் இறக்குகிறான்.**

**( திருக்குர்ஆன் 16: 3 )**

இந்த வசனத்திற்கு ஹசரத் முஸ்லிஹ் மவூது (ரலி) அவர்கள் தப்சீரில் வழங்கும்போது இங்கே الروح **(அர் ரூஹ்-இறை வெளிப்ப்பா) ட்டினால் என்பதன் பொருள் இறைவனின் உயிர் வழங்கும் வார்த்தை என்பதாகும்**.இது ஒரு நபியின் செய்தியை அதன் உயிர் வழங்கும் குணங்களை குறிப்பதற்கும் கூட பயன்படுத்தப்படுகின்றது.

'மக்களை எச்சரிக்க' என்ற வார்த்தைகள் இங்கே சுட்டிக் காட்டுகின்ற ' **இறை வெளிப்பாடு**' என்பதன் பொருள் ஒரு இறைத் தூதருக்கு வழங்கப்படுகின்ற சிறப்பு வெளிப்பாடாகும். இறை வெளிப்பாடு பொதுவாக இரண்டு வகையானது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்:

(1)பெறக்கூடிய நபரைப் பற்றிய அவருடைய சொந்த வெளிப்பாடு.பொதுவாக அதனை வெளியிடுவதற்கு எந்த 'சிறப்பு தடை'யும் இல்லை என்றாலும் அது அறிந்து கொள்ளப்பட்டு வெளியிட வேண்டிய தேவையில்லை

(2)மனிதகுலத்திற்கான பரந்த (அளவிலான) இறை வெளிப்பாடு. பிந்தைய இந்த **வகையிலான இறை வெளிப்பாட்டிற்க்கு பரந்த வகையில் அறிவிக்க வேண்டும்**, **மேலும் அதனை (வலுக்கட்டாயமாக) அடக்குவது என்பதானது ஒரு உண்மையான பாவத்திற்கு சமமாகும்.**

முதல் வகையான வஹீ பொதுவானதாகும் இதையே ஹசரத் மஸீஹ் அலை அவர்கள் கூறும்போது **ஜிப்ராயீலிய ஒளியின் 46-ஆவது பகுதி முழு உலகிலும்** பரவி இருக்கிறது. சொல்லப்போனால், வேசிகளின் குழுவைச் சேர்ந்த மிகவும் துர் நடத்தையுடைய- தன் இளமையை முழுவதும் தீய நடத்தையிலேய கழித்த ஒரு பெண், சில நேரத்தில் உண்மையான கனவைப் பார்த்து விடுகிறாள் என்பது அனுபவத்தில் அறிந்த உண்மை என்பது வரை நான் ஏற்றுக் கொள்கிறேன். இத்தகைய பெண் இரவில் குடித்து விட்டு அந்நிய ஆணுடன் படுக்கையில் கிடக்கும் போது கூட ஏதாவதொரு கனவைப் பார்க்கிறாள். அது உண்மையாகி நிறைவேறியும் விடுகின்றது என்பது இன்னும் ஆச்சரியமான விஷயமாகும்(குறிக்கோள் பற்றிய விளக்கம் பக்கம் 73)



ஆனால் இரண்டாவது வகை அறிவிக்கும்படியான வஹீயை மார்க்கத்தின் உயிர் ஆகும் இந்த அருள் இப்போது இஸ்லாத்தை தவிர வேறு எந்த மார்க்கத்திற்கும் கிட்டாது.


அன்னார் (அலை) கூறுகிறார்கள்:-

இறைவனிடமிருந்து இல்ஹாமை (இறைவெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் பாக்கியத்தை உண்மையான மார்க்கமாகிய உம்மதே முஹம்மதிய்யாவில் நிலைத்து நிற்பவர்களுக்கு அவன் அளிக்கிறான். இறைவனின் சக்திக்கு மட்டும் உட்பட்ட, மறைவான செய்திகளை அவர்களுக்கு அறிவிக்கின்றான். எவர் உண்மையான உள்ளத்துடன் திருக்குர்ஆனை இறைவசனம் என உறுதி கொண்டு, உண்மையான பற்றுடன் அதிலுள்ள கட்டளைகளின்படி நடந்து, நபிகள் நாயகம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை இறைவனின் உண்மையான முழுமை பெற்ற நபி என்றும், எல்லா நபிமார்களையும் விட மிகச் சிறந்த நபி என்றும் காத்தமுன் நபிய்யீன் என்றும் உறுதி கொள்கின்றாரோ, அத்தகு நம்பிக்கையாளர்களுக்கு மட்டுமே அந்தத் தூய்மையான இல்ஹாமைப் பெற்றுக் கொள்ளும் பாக்கியத்தை இறைவன் அளிக்கின்றான். **யூதர்கள், கிறித்தவர்கள், ஆரியர்கள், பிராமணர்கள் ஆகியோருக்கு அந்த இல்ஹாம் ஒருபோதும் கிட்டாது.** எனினும் திருக்குர் ஆனை முழுமையாகப் பின்பற்றுபவர்களுக்கு அது அப்போதும் கிடைத்தது; இப்போதும் கிடைக்கிறது; இனிமேலும் கிடைக்கும். புதியதொரு ரிஸாலத்தைக் கொண்டுள்ள வஹி அவசியமில்லாமையால் அது முடிவு பெற்று விட்டது. எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின்

**<u>உண்மையான தொண்டர்களுக்கு அந்த இல்ஹாம் கிடைக்கிறது</u>**. அது ஒருபோதும் நிற்காது. நமக்குக் கிடைக்கும் இந்த இல்ஹாம் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல) அவர்கள் உண்மை நபி என்பதற்கு மிகப் பெரிய சான்றாகும். **<u>இந்த சான்றுக்கு முன்னால் இஸ்லாத்தை மறுப்பவர்களும், எதிர்ப்பவர்களும் இழிவும் அவமானமும் அடைகிறார்கள்</u>**. (பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 3 பக்கம் 216 அடிக்குறிப்பு 11)



ஆனால் இந்த அருள் இப்போது நிஜாமிகளிடம் கேள்விக்குறியாக்கிவிட்டது என்பதே நிதர்சனமான உண்மை, மேலும் அப்துல் கபார் ஜனாபா, மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறக்கிய வஹியை




**"இன்னீ மஅல் கஃப்பார்" -நான் கப்பார் உடன் இருக்கிறேன்( இதன் அர்த்தம் நான் கருணை உடையவர்களுடன் இருக்கிறேன் என்பதாகும்)**

தனக்கானது என்று கூறி ஹசரத் மிர்சா பசுரூதீன் மஹமூத் அஹமத் (ரலி) அவர்கள் ஒரு பொய்யர் (நஊதுபில்லாஹ்) என்று கூறுகிறார். இறை அறிவிப்பு இல்லாமல் இத்தகைய மனோஇச்சைகள் அருளுக்குரிய இந்த சமுதாயத்தை எங்கு அழைத்துச்செல்கின்றது என்று பாருங்கள் சகோதரர்களே

**ஆனால் இறைவன் அருளாக இந்த நூற்றாண்டில் தோன்றிய இறைத்தூதர் ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம் (அலை)** அவர்கள் **நமது எஜமானர் ஹசரத் முஹம்மத் முஸ்தபா ஸல் அவர்களின் முன்னறிவிப்பையும் தனது முஜத்தித் வாதத்தையும் எவ்வாறு செய்கின்றார்கள் என்று சற்று சிந்தியுங்கள் சகோதரர்களே**

அன்னார் தனது வருகையை பற்றி கூறும்போது

**...ஹிஜ்ரி 1400 லிருந்து 20 அல்லது 30 வருடங்களை கூட்டிக்கொள்ளுங்கள் அப்போது உங்களிடையே மஹதி தோற்றுவார்....**(ஆதாரம்: Qalda bin Zayd bin

Baraka, Qalda bin Zayd bin Baraka, Asma Masalik Li Ayyam Al-Mahdi: Malik Li Kul Al-Dunya Bi Amr Allah El-Malik, p.216))

மேலும் இந்த ஹதீதின் அறிவிப்பாளர் அபூ ஹுரைரா(ரலி)ஆவார்கள் மேலும் இந்த நபிமொழி பற்றி கலீஃபத்துல்லாஹ் (அலை) அவர்கள் கூறும்போது:-- நபி (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பு எனது வருகையை உறுதி செய்கின்றது என்று வாதம் செய்து உள்ளார்கள். (https://sahih-al-islam.blogspot.com/2011/06/divine-manifestation-in-mauritius.html)

**ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம் (அலை)** அவர்கள்,அன்னார் இந்த நூற்றாண்டின் இறைவஹீயின் மூலம் முஜத்தித் வாதத்தை இவ்வாறு செய்கின்றார்கள்

இறங்கிய அன்னாருக்கு இறங்கிய அறிவிக்கும்படியான இறைவஹீ(10.09.2010)

**Bismillah hir rahman nir raheem**

**Ya Khalifathullah! Qul: "*Annal Mujaddido*" (*O Khalifathullah! Tell them: 'I am the Mujaddid')***

**கலீபத்துல்லாஹ்வே! அவர்களுக்கு கூறுவீராக! "நான்** தான் **முஜத்தித்** என்று"

**எனவே இந்த இரண்டு நிலையை பற்றி திருக்குரான் தெளிவாக நமக்கு எச்சரிக்கின்றது**

**எனவே எவர் தம் இறைவனின் தெளிவான பாதையில் இருக்கிறாரோ அவர் எவனுடைய செயலின் தீமை அவனுக்கு அழகாகக் காண்பிக்கப் பட்டுள்ளதோ, இன்னும், எவர்கள் தம் மனோ இச்சைகளைப் பின்பற்றுகின்றார்களோ அத்தகையோருக்கு ஒப்பாவாரா? (அல்குர்ஆன் : 47:14)**

**இந்த காலத்தின் இமாம் ஹசரத் முனீர் அஹமத் (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:-**

**மனிதன் மீதான இறை வெளிப்பாடுகளின் இறங்குதல்:**

இந்த வனங்கள் மட்டுமல்லாது திருகுர்ஆனின் சூரா அந் நஜ்ம் 53 ஆம் அத்தியாயத்தில் **ரூஹூல் குத்தூஸ்** மிக அழகான மற்றும் மனங்கவர்கிற முறையில் இறங்குவதைக் குறித்து, அசாதாரணமான வழியில் அல்லாஹ் தனது சொந்த



சாரத்தை(உள்ளியல்பை) வெளிப்பாடுகளின் வடிவில், தான் தேர்ந்தெடுத்த தூதரின் மீது இறக்குகின்றான் என்பதை விளக்குகின்றான்(அதனால்தான் நாம் அதனை இறை வெளிப்பாடு என்று கூறுகின்றோம்). ஹதீஸ்களிலிருந்தும் நாம் அறிவது போல நபி(ஸல்) அவர்களின் மிகப்பெரிய ஆன்மீக தரிசனமாகிய அதாவது **இஸ்ரா** மற்றும் **மிஹ்ராஜ்** நிகழ்வின்போது நபி(ஸல்) அவர்களுடன் தூய வெளிப்பாட்டின் உயர் வானவராகிய(மலக்கு) ஹஸ்ரத் ஜிப்ரீல்(அலை) அவர்கள் கீழ் வானத்திலிருந்து "**சித்ரதுல் முன்தஹா**" வரை சென்றார்கள். சூரத்துல் அந்நஜ்ம் லிருந்து ஹஸ்ரத் ஜிப்ரீல்(அலை) அவர்கள், ரூஹூல் குத்தூஸின் ஒரு பகுதி(சாராம்சம்) மட்டும்தான் என்றும் அதனுடைய முழுமையான சாராம்சம் அல்ல என்பதையும் நாம் அறிந்து கொள்கிறோம். ரூஹூல் குத்தூஸின் பல வெளிப்பாடுகளில் அவரும் ஒன்றாவார். அல்லாஹ் இதனை தெளிவான வார்த்தைகளில் குறிப்பிடுகிறான்:-

**"நிச்சயமாக அவர்(அதாவது ஹஜ்ரத் முஹம்மது (ஸல்) மற்றொரு முறையும் அவரைக் கண்டார். மிகத்தொலைவிலுள்ள இலந்தை மரத்திற்கு(சித்ரதுல் முந்தஹா)ப் பக்கத்தில்..... மூடக்கூடிய ஒன்று இலந்தை மரத்தை மூடிய போது (அது நிகழ்ந்தது)"**

**(அந் நஜ்ம் 53:14-17)**

அல்லாஹ் திருக்குர்ஆனில் மனித இனத்தை (பஷர்) படைப்பது தொடர்பாக இன்னும் மிகக் குறிப்பாக அவனது பிரதிநிதியை(ஒரு கலீபத்துல்லாஹ்வை) அனுப்பி வைப்பதன் மூலம் மனித குலத்திற்கு அல்லாஹ் அவனது சிறப்புமிக்க நற்செய்தியினை (பஷர்) வழங்குவதாகக் கூறுகின்றான்:

**"நான் அவனை முழுமையாக்கி என் ஆவியை(ரூஹ்) அவனுள் ஊதிய போது நீங்கள்எல்லாரும் அவனுடன் சிரம் பணிந்து விடுங்கள்** "(அல் ஹிஜ்ர் 15:30; ஸஅத் 38:73)

இந்த விஷயத்தில் மனிதனுக்கு மிகக் குறைந்த அறிவே வழங்கப்பட்டிருக்கின்றது.அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

**"அவர்கள் உம்மிடம் ரூஹ் (ஆன்மாவை)ப் பற்றி வினவுகின்றனர். நீர் அவர்களிடம் ரூஹ் (ஆன்மா) என் இறைவனின் கட்டளையினால் படைக்கப்பட்டுள்ளது, உங்களுக்கு அதுபற்றி மிகக் குறைந்த அறிவே கொடுக்கப்பட்டுள்ளது." எனக் கூறுவீராக**(அல் இஸ்ரா 17:86

அல்லாஹ் திருக்குர்ஆனில் ரூஹைப்பற்றி குறிப்பிடும் போதெல்லாம், நம் கவனத்தை தெய்வீக வெளிப்பாட்டின் சாராம்சத்தின் பக்கம், அவனது அருகாமைக்கு நம்மை அழைக்கின்றான். மனிதனுக்கு ஒரு ஆன்மா (நஃப்ஸ்) மட்டுமல்ல ஒரு ரூஹும் உள்ளது.. இந்த இரண்டு சொற்களில் உள்ள வித்தியாசத்தை உங்களுக்கு புரிய வைப்பதற்காக வேறொரு தரத்தில் இதுபற்றி கூறுவதானால், நஃப்ஸினை சீர்திருத்தவும், சீர்குலைக்கவும் முடியும். ஆனால் ரூஹினை சீர்குலைத்து விட முடியாது.மனிதன் அல்லாஹ்வுடன் இணைந்திருக்கும்போது, தொழுகைகள் (ஸலாத்), பிரார்த்தனைகள் (துஆக்கள்) மற்றும் திக்ருல்லாக்கள் (அல்லாஹ்வின் நினைவு / தியானம்) மூலம் அவனுடன் ஒரு நீடித்த உறவை தேடுகின்றான். ஆதலால் அவன்(அல்லாஹ்), அவனது (மனிதனின்) நஃப்ஸை ரூஹின் சாரத்துடன் ஒன்றிணைக்கும் வழியினை திறக்கின்றான். அதாவது இறை வெளிப்பாடுகளை இறக்குவதன் மூலம் அல்லது உண்மையான கனவுகள் மற்றும் ஆன்மீக தரிசனங்களின் வாயிலாக , அல்லாஹ் அவனுடன் ஓர் அருளுக்குரிய தொடர்பைப் பெற்றுக்கொள்வதற்கான வழியைத் திறக்கின்றான்.

நஃப்ஸினைப் பொறுத்தவரையில், அதாவது ஆன்மா அல்லது உள் உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாக சுத்தீகரிக்கப்படும் போது, **நஃப்ஸே அம்மாரா** (தீமையை தூண்டும் ஆன்மா) மெதுவாக **நஃப்ஸே லவ்வாமாவை** (குற்றம்சாட்டும் ஆன்மாவை) அடைகிறது. இறுதியாக அவர் அல்லாஹ்வுடனான முழுமையான ஒரு உறவினை அடையும்வரை அவனது பரிசுத்த ஆவியினால் ஈர்க்கப்படுவார். அந்த நிலையினை அடைந்த நபரை, அல்லது அந்த நிலையினை அடைந்த ஆன்மாவை, **நஃப்ஸே முத்மஇன்னா** (சாந்தியடைந்த ஆன்மா) என அழைக்கப்படுகிறது.

## 15 ஆகஸ்ட் 2011ல் அல்லாஹ் வெளிப்படுத்திய இறை வெளிப் பாட்டின் செய்தி:

அல்லாஹ்வின் தூதரின் ஆன்மா சாந்தி அடைந்த நிலையிலுள்ளது. பிற மக்களின் இதயங்களில் சாந்தியிணை நுழைய வைப்பதற்கான வழிமுறைகளை அவர் கற்பிக்கின்றார். நிச்சயமாக மனிதன், ஒருவருக்கொருவர் மற்றும் தனிப்பட்ட (ரீதியிலும்) நான் என்னும் அகந்தையில் இருந்து (விடுபட்டு) பல நிலைகளை கடந்து செல்ல வேண்டும்.

அப்போது (மட்டும்தான்) மனம் மற்றும் ஆன்மாவின் மிக அழகிய உயர் நிலையை அவரால் அடைய முடியும். மனது பௌதீகமாக உடலை வழிநடத்துகின்ற அதே சமயம், ஆன்மா உடலை ஆன்மீக ரீதியில் வழிநடத்துகிறது..

திருமறையில் அல்லாஹ் கூறுகின்றான்:

**நிம்மதி அடைந்த ஆன்மாவே! நீ உன் இறைவனிடம் திருப்தியடைந்தவாறும், அவன் உன்னிடம் திருப்தியடைந்தவாறும் அவனிடம் திரும்பி வருக! தேர்ந்தெடுக்கப்பட்ட என் அடியார்களுக்கு இடையே நுழைந்து விடுக! ( என உன் இறைவன் உன்னிடம் கூறுகின்றான்.) (89:28-31)**

மனித மனத்தால் புரிந்து கொள்ள முடியாத, அல்லாஹ்வுடனான ஓர் (மிக நெருங்கிய) உறவின் மூலம் ஆன்மா உயர் நிலையை அடைகிறது. உண்மையில் அது (தன்னை) அறியாமலேயே ஒரு குறிப்பிட்ட நிலையை பற்றி பிடிக்கின்றது.ஆன்மா அல்லாஹ்வுடனான அத்தகையதொரு உறவை அனுபவிக்கிறது; அது அல்லாஹ்விடமிருந்துள்ள இறை அருள்நிறைந்த செய்திகளையோ அல்லது இறை தண்டனை நிறைந்த செய்திகளையோப் பெறுகிறது. ஆன்மாவின் சுத்திகரிப்பானது, ஓர் கட்டம் வரும்போது மனதையும் சுத்தப்படுத்த (அது) உதவுகின்றது.தக்வா (பயபக்தி), இதயத்தின் ஆதிக்கத்திற்குள் நுழைந்து, இறை விருப்பத்திற்கு நறுமணத்துடன் கூடிய அடிபணிதலுடன் மனதை அடைந்து விடும்போது ,அதுவே ' மனத்தூய்மை' என்று அழைக்கப்படுகிறது.

ஆன்மாவே இறை வெளிப்பட்டினைப் பெறுகின்றது.அதனால் தான் ஆன்மா மட்டுமே இறை வெளிப்பாட்டின் நிலையில் அல்லாஹ்வுடன் தொடர்பு கொள்கின்றது. ஹஜ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களுக்கு ஆன்மீக தரிசனத்தின் கதவு திறக்கப்பட்டபோதும் அதுவே நடந்தது, இதன் மூலம் அவர்களது ஆன்மா இறை வெளிப்பாடுகளின் ஒளியின் அமைதியைக் கண்டறிந்து, அவர்களை தனது இறைவனை நோக்கி

வானவர் தூதர் ஜிப்ரயில்(அலை) அவர்களின் துணையுடன் படிப்படியாக வழிநடத்திச் சென்றது. அவர்கள் அடைந்த அந்த ஒரு (உயர்) நிலையை இறைவனின் படைப்புகளில் வேறு எவராலும் அடையமுடியவில்லை., வானவர்களும் கூட (அடையவில்லை). ஆகையால், வானவர்கள் கூட தங்கள் ஒளியின் உடலால் இறைவனை அணுக முடியாத போது, பரிபூரணமற்ற பண்புகளைக் கொண்ட மனித மனமானது, ஹஜ்ரத் நபி (ஸல்) அவர்கள் பௌதீக உடலுடன் வானத்திற்கு அல்லாஹ்விடம் சென்றார்கள் என்றும், அவர்கள் கண்ட எல்லாவற்றையும் தனது தற்காலிக பௌதீகக் கண்களால் கண்டார்கள் என்ற கருத்தையும் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

**வானவர்கள் ஆன்மாவைப் பெற்றவர்களாக இல்லை; ஆனால் அவர்களின் அடிப்படை சாராம்சம் இறை ஒளியைக் கொண்டுள்ளது, ஏனென்றால் அவர்களுக்கு ஒரே ஒரு அடையாளம் மட்டுமே உள்ளது, அதே சமயம் மனிதனுக்கு இரண்டு அடையாளங்கள் உள்ளன, அவை இரண்டு வெவ்வேறு (உலகங்களான) தற்காலிக மற்றும் ஆன்மீக உலகங்களில் இருக்க அனுமதிக்கின்றன. நாம் பூமியிலும் அதே நேரத்தில் (அதற்கு) இணையான, ஆன்மீக உலகிலுமாக இரு விதமான வாழ்க்கை வாழ்கிறோம்.மனிதன் பூமியில் நடந்து கொண்டு வேலை செய்யும் போதும், கைகளைக் கொண்டு உழைக்கும்போதும், அவன் தற்காலிகமான (இவ்வுலகில்) வாழ்கிறான், அதேசமயம் அவனது தியானம், பிரார்த்தனை மற்றும் தூக்கம் ஆகியவற்றில் இறைவனை நினைவு கூர்தளின் பிரகாசத்தை கொண்டு நிரப்பும்போது, அவன் ஆன்மீக (உலகில்) வாழ்கிறான்.**

ஆன்மீகத்தை உடல் மற்றும் ஆன்மா இரண்டினாலும் உணர்ந்து கொள்ள முடியும். ஆன்மீகம் என்பது நமது உண்மையான உணர்வு நிலையுடனான தொடர்பைக் குறிக்கிறது, அது நமது முழு கவனத்தையும் நம்முடைய படைப் பாளனான அல்லாஹ்விடம் வழிநடத்திச் செல்கிறது. பல்வேறு மதங்களும் ஆன்மீகத்தின் கருத்தை தங்களது சொந்த வழியில் வரையறுக்கின்றன, ஆனால் உண்மை என்னவென்றால், அவர்கள் தியானத்தில் ஈடுபடும்போது அல்லாஹ்வையே அவர்கள் கண்டு கொள்கின்றனர், அதுவே அவர்களின் வாழ்க்கையை தெய்வீக ஒளியால் நிரப்புகிறதே யன்றி, அவுலியாக்கள், தூதர்கள் மற்றும் பீர்மார்களின் (உதவியைக்) கொண்ட அல்ல. ஏக இறைவனிடமிருந்து அவர்கள் ஒளியை பெற்றிருந்தும் துரதிஷ்டவசமாக அவ்வொளி அவர்களின் பலதரப்பட்ட தெய்வங்கள் தங்களுக்கு வழங்கியது என எண்ணுகின்றனர். அதனால் அவர்கள் குழப்பம் என்ற ஒரு படு குழியில் வீழ்ந்து விடுகின்றனர்.இதனால் அவர்கள் அவநம்பிக்கையில் தடுமாறி, இன்னும் அதிக அவநம்பிக்கையில் வீழ்ந்து விடுகின்றனர். ஆனால் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பெறுகின்ற இந்த இறை ஒளியானது சர்வ வல்லமையுள்ள (ஏக) இறைவனிடமிருந்து கிடைத்ததல்ல என்றும் அது அவர்கள்

சுயமாக எண்ணிக்கொண்ட அல்லது அவர்களின் கற்பனையில் வாழும் தெய்வத்திடமிருந்து கிடைத்தது (என்று நம்புகின்றனர்).

இறை வெளிப்பாடு என்பது சிதைக்க முடியாத ஒன்று, அதேசமயம் ஷைத்தானிய வெளிப்பாடுகளை எளிதில் சிதைக்க முடியும், மேலும் அதன் நிலை நிற்பு குறைவானதும், குறுகிய காலத்தை மட்டுமே (கொண்டுள்ளதுமாகும்). இறை வெளிப்பாடுகள் எத்தகையதொரு ஒளியைக் கொண்டுள்ள தென்றால், அது ஆன்மாவை அல்லாஹ்வின் மீது உறுதியையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.(அதன் மூலமாக) அவன் தனது நேர்மையான அடியானுக்கே உரித்தான அமைதியினை வழங்குகின்றான். ஏனென்றால் அவர் வானம் மற்றும் பூமியின் இறைவனுடன் (ஆழ்மானதொரு உறவின் மூலம்) இணைந்திருப்பதால் ஆகும்.(அதனால்) ஆன்மா அறியாமலேயே (தன்னுணர்வற்ற நிலையிலும்) சாந்தியடைவது மட்டுமல்லாமல்,அந்த சாந்தியானது (அவரை மேலும் முன்னேற்றமடைய செய்யும்) உந்துதல் கருவியாகவும் மாறிவிடுகிறது, அது அவர்களின் அன்றாட வாழ்க்கையில், அவர்கள் எதைச் செய்தாலும் அல்லது (எதனை)க்கடந்து சென்றாலும் அதனை முழுமையாக உணர வைக்கிறது.எனவே ஆன்மாவை ஏமாற்றி விட முடியாது. வேண்டுமானால், ஒரு நபர் மீது எப்போதெல்லாம் ஷைத்தானிய வெளிப்பாடுகள் இறங்குமோ (அப்போது) மனதை ஏமாற்றி விடுவதாக இருக்கலாம்.மனம், அதன் சரியான நிலைப்பாட்டில் இல்லாமல், ஒரு ஷைத்தானிய வெளிப்பாட்டை பெறும்போது, மனம் ஆன்மாவை முழுமையாக ஆக்கிரமிக்கும் போது, ஆன்மாவும் அதன் மீது நிலை பெற்று(கீழ்படிந்து) விடுகின்றது. அதுவே தீய மக்களை உருவாக்குகிறது. அதாவது அவர்களின் ஆன்மாக்களின் நிலையை மனது அத்தகைய அளவிற்கு கடந்து செல்லும் போது, அவர்கள் எளிதில் ஷைத்தானிய தாக்குதல்களுக்கு உள்ளாகி, தாய்மார்களின் கருவறைகளில் அவர்கள் இருந்ததிலிருந்து இயல்பாகவே அவர்களிடமிருந்துள்ள அந்த இறைப் பண்புகள் விலகி செல்கிறது. அதனால்தான் நன்மை மற்றும் தீமை ஆகிய இரண்டுமே ஒரு மனிதனிடத்தில் இணைந்திருக்கின்றன. அந்த இரண்டு அம்சங்களும் அவருடையதாகும். ஆனால் அவருடைய சொந்தத் தூண்டுதல்களின் போது நல்ல வழிகளின் பக்கம் அல்லது அழிவின் பக்கம் ஆகிய எந்த திசையில் திருப்பி விட வேண்டும் என்பதைப்பற்றிய முடிவு எடுக்க வேண்டியது அவர்தான். அதனை தேர்ந்தெடுக்கும் உரிமை அவருக்கு உள்ளது. அது குறித்து அவர் செய்யவேண்டியதெல்லாம் அவர்( சுயமே) பகுப்பாய்வு செய்து, (அதைப்) புரிந்து கொண்டு அதனடிப்படையில் செயல்படுவது மட்டுமே.அது ஒரு தீமையான காரியம் என்றால், அது அவரிடம் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு முன்பு, அவரை வழி தவற செய்வதற்கு முன்பு அதிலிருந்து அவர் விலகி செல்ல வேண்டும். அதாவது அந்த எண்ணத்திற்கு முடிவு கட்ட வேண்டும். மிக நல்ல மனிதர்களின் சீரழிவை கூட நாம் அடிக்கடி பார்க்கிறோம். அது ஒரு நபியின் சீடருக்கோ அல்லது ஒரு இறையடியாருக்கோ கூட அவ்வாறு நடை பெற்று விடலாம். அவர் பெற்று வரும் இறை ஒளியை தனக்கு மட்டுமே கிடைப்பதாக அந்த சீடர் நினைக்கின்றார். அது

அவர் அவரது நபியை விட அல்லாஹ் (தன்னை)அதிகமாக நேசிப்பதாகவும்,(அதுவே) அத்தகைய வெளிப்பாட்டின் ஒளிகளை அவருக்கு வழங்கியிருக்க வேண்டும் என்று எண்ணி விடுகின்றார்.ஆனால் இது ஒரு தவறான எண்ணமாகும். அதுவே அவரது நிரந்தர அழிவிற்க்கு காரணமாகி விடுகின்றது.

ஓர் அல்லாஹ்வின் தூதரின் காலகட்டங்களில் அவருக்கு விருப்பமானது அல்லாஹ் (அந்த) ஒளியினை மக்கள் மீது பரப்ப வேண்டும் என்பதாகும். அது உண்மையை உறுதிப்படுத்துவதற்காக மட்டுமே. அந்த ஒளியை அதாவது இறை வெளிப்பாட்டினை மக்கள் பெறுவதன் மூலம் இறைத்தூதருக்கு கிடைக்கும் வெளிப்பாடுகள் உண்மையானது என அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். மேலும் அதனால் அம்மக்கள் (நெருக்கமாக) வந்து,, அல்லாஹ்வின் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டு அவர்களின் காலகட்டத்தில் தோன்றிய இறை தூதரின் கைகளில் (பை அத்தும்) செய்துவிடலாம்.

ஓர் அல்லாஹ்வின் தூதரின் முன்னிலையில், பரிசுத்த ஆன்மாவினால் மக்கள் ஞானம் பெறத் தொடங்கும் போது, அது இந்த தூதருக்கு ஆதரவாக விளங்கும் மிகப்பெரிய அடையாளங்களில் ஒன்றாகும். சாதாரண மக்கள் கூட தீர்க்கதரிசனம் செய்யும் ஒரு காலம் வரும் என்று இஞ்சீலில் (இயேசுவின் போதனை) எழுதப்பட்டிருக்கிறது. பிந்தைய(இறுதி) நாட்கள் இதோ உங்களிடத்தில் வந்தடைந்திருக்கிறது. உங்கள் மத்தியில் ஒரு இறைத்தூதர் தோன்றியுள்ளார். அவர் உலகளாவிய அல்லாஹ்வின் அதே தூதர் ஆவார்.நான் பிரச்சாரத்திற்காகவோ அல்லது விளம்பரம் செய்யவோ வரவில்லை,மாறாக, நான் மக்களை அல்லாஹ்வை நோக்கி வழிநடத்த வந்திருக்கிறேன்.அதாவது அவர்கள் தங்களைப் படைத்த இறைவனை புரிந்து கொண்டு அவனை பிரத்தியேகமாக நேசிக்கவும், அவனே வழிபடுவதில் எந்த ஒரு கூட்டாளியையும் (அவனுக்கு)இணைவைக்காமல் இருப்பதையும் (போதிப்பதற்காகவே வந்துள்ளேன்).

திருக்குர்ஆன் வரையறுத்துள்ள அல்லாஹ் வழங்கியுள்ள எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படி வதன் மூலமும்,அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையினை முழுமையாக பின்பற்றுவதனாலும், மேலும் அவருடைய(தமது) காலகட்டத்தில் தோன்றுகின்ற அல்லாஹ்வின் தூதருடன் சேர்ந்து (அவருக்குக்) கீழ்படிவதனாலும் மட்டுமே ஒருவர் அல்லாஹ்வை அறிந்து கொள்ள முடியும். உண்மையாகவே, இந்நூற்றாண்டில் வாழும் மக்களுக்கு ஒரு சாட்சியாகவே நான் தோன்றியுள்ளேன்.நீங்கள் அனைவரும் அல்லாஹ்விடமே கணக்கு கொடுக்க வேண்டுமெயன்றி என்னிடம் அல்ல! உங்களுடைய இதயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த என்னால் இயலாது! என்னால் செய்ய முடிந்ததெல்லாம் அல்லாஹ்வின் செய்தியை உங்களிடம் எடுத்து வைப்பது மட்டுமே. எவருடைய இதயத்திற்கு அவன் ஒளியை வழங்குவான் என்பதை மிக நன்கு அறிந்தவன் அல்லாஹ் மட்டுமேயாவான்.

ஆன்மாவானது, இறை தொடர்பின்(மீது கொண்ட) தாகத்தினால் (தானாக)முன் வந்து, அதன் உண்மையான இருப்பு மற்றும் அதன் அடிப்படை சாராம்சம் என்ற குளத்திற்குள் மூழ்கிவிட விரும்பும்போது, பிறகு அந்த ஆன்மா ஒரு குறிப்பிட்ட அளவிற்கு (ஞான ஒளியால்) பிரகாசத்தை பெறும்போது , அல்லாஹ்வின் வழியில் (உதவி) பணி செய்வதற்காக, அல்லாஹ்வின் தூதருக்காக அவனை(அல்லது அவளை)அல்லாஹ் பயன்படுத்துவான். மனம் ஏதோ சிலவற்றை விரும்பலாம்; ஆனால் உடல் பலவீனமாக இருக்கிறது. சிலவேளைகளில் உள்ளம்(மனம்) பலவீனமாக இருக்கும். ஆனால் ஆன்மா வலுவாக இருக்கிறது.(எந்த அளவிற்கென்றால்) மனதின் பலஹீனமான நிலையைத் தோற்கடிக்க போதுமான (அளவிற்கு) வலிமையானது.(அந்த நேரத்தில் அது)ஒரு வேகமான தானியங்கி வாகனம் (ஆட்டோமொபைல்) போல எப்பொழுதும், அல்லாஹ்வினுடைய மற்றும் அல்லாஹ்வின் தூதருடையக் கட்டளைகளை நிறைவேற்றிட ஆயத்தமாகி செயல்பட ஆரம்பித்து விடுகின்றது
ஆன்மா(ரூஹ்)வானது அதன் முழுமை பெற்ற நிலையில் (எவ்வாறு)இருக்க வேண்டுமோ (அந்த பிரதிபலிப்பின்) உருவமைப்பாக சாந்தியில் இருக்கின்ற 'நஃப்ஸ்' விளங்குகிறது. சாந்தி அடைந்த ஆன்மா, மனித நிலையை மேம்படுத்துவதற்கு தூண்டுகிறது. அந்நிலையில் மனிதன் அல்லாஹ்வின் ஓர் முழுமையான ஊழியனாகி, உண்மையிலேயே அல்லாஹ்வுக்காக சிறந்த வழிகளில் சேவை செய்யக் கூடியவனாக ஆகி விடுகின்றான்.

'முத்மயின்னா' (சாந்தி அடையும் ஆன்மா)வின் காலகட்டத்தில் அதை பூர்த்தி செய்வதற்கு முன்பு, நான் என்னும் ஆணவம் (ஈகோ) வெவ்வேறு சோதனைகளை கடந்து செல்ல வேண்டியுள்ளது. உண்மையில் ஆன்மா என்பது, ஒருவர் இறை ஒளியை (மற்றும்) இறை வெளிப்பாடுகளைப் பெறுவதற்கான வழிமுறையாகும்.

மலக்குகள் மனிதர்களைப் போல இருந்திருந்தால், இறை வெளிப்பாடுகளை கொண்டு வரும் வானவரையும் அல்லாஹ், மனிதன் அடிப்படை இயல்பில் கொண்டுள்ள நஃப்ஸின் (பெயரிலேயே) அழைத்திருப்பான்.ஆனால் எஞ்சியுள்ள உண்மை என்னவென்றால், இறை வெளிப்பாட்டின் வானவர் இறங்குவதை அல்லாஹ் தெளிவாக "ரூஹ்" (சூரா அல்-கத்ரில்) என்ற வார்த்தையால் அழைக்கிறான். இதன் மூலம் மனிதனுக்கு தெளிவாக சுட்டிக்காட்டுவது, அவர்கள் பெற்றிருக்கின்ற ' ரூஹ் ' எத்தகையதென்றால் அவர்கள் இறைவனின் எல்லாக் கட்டளைகளுக்கு இணங்கியும், அத்தகைய வரத்தைப் பெறுவதற்கு அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்டும் இருந்தால்,அவர்கள் எந்த நேரத்திலும் இறை வெளிப்பாடுகளைப் பெறக் கூடியவர்களாகி விட முடியும் என்பதுமாகும்.

ஹஜ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களது விஷயத்தைப் பொறுத்தவரை,' மிஃராஜ் ' மற்றும் இறை வெளிப்படுகளைக் கொண்டு வரும் வானவரைக் காட்டிலும் அவர்களது மேன்மைக்குமான மற்றொரு விளக்கம் தெளிவாக்குகின்றது.அதில், ஏன்

அவர்கள் இறைவெளிப்பாடுகளைப் பெறக் கூடியவராக ஆக்குகின்ற' ரூஹை 'மட்டும் கொண்டிருக்காமல் (அத்துடன்) நஃப்ஸ்-ஏ-முத்மயின்னா" இன் (அடிப்படை)சாரத்தையும் கூட முழுமையாக நிறைவுசெய்திருந்தார்கள்? (நபி(ஸல்))அவர்கள் பெற்றிருந்த ரூஹ் மற்றும் அவர்கள் வெளிப்படுத்திய நஃப்ஸ் ஆகியவை ஒன்றிணைந்து ஒரே எண்ணங்களின் வரிசையில் இருந்தன.நான் அதை அப்படியேக் கூறுவதாக இருந்தால், ஆன்மா மற்றும் மனதின் அவ்வாறான மிகச்சரியான ஒத்திசைவை(ஒன்றிணைதலை) வேறு எந்த மனிதரும் அடைந்து வெற்றி பெறவில்லை என்றும் கூறலாம்(நான் என்னும் எண்ணத்தை கட்டுப்படுத்துவதில்) .அல்லாஹ்வின் மற்றத் தூதர்களாலும் அதைப் பெற முடியும், ஆனாலும் புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடைந்ததைப் போன்ற(ஆன்மா மற்றும் மனதின்) சரியான பொருத்தத்தை அவர்களால் அடைய முடியாது. அவர்களுடைய மேன்மையின் அளவு ஒவ்வொரு விஷயத்திலும் எல்லையற்றது, எந்த அளவிற்கென்றால், அல்லாஹ் அவர்களிடம் “நீர் உண்மையிலேயே உயரியப் பண்புகளைக் கொண்டவராக இருக்கின்றீர் ”என்று கூறியிருக்கின்றான். இப்படிப்பட்ட குணங்கள் அவரது மனத்தின் விழிப்புணர்வு நிலை பூமியில் தனது சொந்த இருப்பை மேம்படுத்த, இறை விருப்பத்துடன் கைகோர்த்து செயல்படுவதன் மூலம், அவருடைய நான் என்னும் எண்ணத்தை சுத்திகரிப்பதிலிருந்து வருகின்றன(அந்த நற் பண்புகளை அடைய முடியும்).வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இறை விருப்பத்திற்கு அடிபணிதல், இறை கட்டளைகளுக்கு அடிபணிதல் என்பதாகும்.

வானவர்கள் ஒரு நஃப்ஸையோ அல்லது ஒரு ரூஹையோ கொண்டிருக்கவில்லை, ஆனால் அவர்கள் சிறப்பாக உருவாக்கப்பட்ட ஒரு ரூஹ் ஆவார்கள். மனிதர்கள் தன்வசம் உள்ள நஃப்ஸால் மகிழ்ச்சியடைகிறார்கள், ஆனால் அந்த நஃப்ஸ் தோண்டி எடுக்கப்பட்ட மூல வைரங்களைப் போன்றது, அவை ஆயத்தம் செய்யப்பட்டு மெருகூட்டப்பட வேண்டும், இதனால் அது அதன் அனைத்து ஒளியுடனும் பிரகாசிக்கவும், அல்லாஹ்வின் பார்வையில் விலைமதிப்பற்றதாகவும் இருக்கும்! ஷெய்த்தான் மனிதனின் கடுமையான எதிரியாவான். அவனுடைய படை நமக்குள் இயல்பாகவே இருக்கிறது, நம் இரத்தத்தோடு கலந்து நாம் வந்த ஆன்மீக ஊற்றிலிருந்து நம்மை விலகிச் செல்ல வைக்கின்றான். தங்களது நஃப்ஸையும் ரூஹையும் சுத்தீகரிக்காமலும், ஆன்மீகத்தின் சாந்தியை பெறுவதற்கு அவற்றை(நஃப்ஸையும் ரூஹையும்) ஒன்றிணைத்து செயல்படாதவர் மீதும் மட்டுமே ஷெய்த்தானின் படை வெற்றிபெறும்.சமாதானம் (சாந்தி) தான் மனிதனை இறைவனிடம் அழைத்துச் செல்கிறது. சாந்தி இல்லாமல், அவர் தனது ஈமானை மேம்படுத்தவோ, அல்லாஹ்வின் திருமறையின் ஞானங்களை பெற்று தனது இலக்காகிய அல்லாஹ்வை அடையவோ முடியாது. அதனால்தான் **சூரா அல்-கத்ரில் அல்லாஹ் விடியற்காலை வரை அமைதி இருக்கும் என கூறுகிறான்,**

ஒருவர் இந்த பௌதீக உலகிற்கு என்ன நடக்கிறது என்பதையும் அவரின் அன்றாட பிரச்சினைகளையும் உண்மையில் அறியாமலேயே. பொதுவாக(அவர்) இரவில் உறங்கும் போது அமைதி அல்லது சாந்தி ஏற்படும்.ஆனால் இந்த வசனத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள அமைதி (அல்லது சாந்தி) என்னவென்றால், அல்லாஹ்வின் அடியான் தான் எந்நிலையில் இருந்தாலும், அல்லாஹ்விடமிருந்து வரும் இந்த அமைதியை அவர் நிச்சயமாகக் கொண்டிருக்கிறார் என்பதாகும். இந்த அமைதியுடன் அல்லாஹ் அவரை பலப்படுத்திய பிறகு, அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் அவர் இவ்வுலகில் தனது கடமைகளை நிறைவேற்ற முடிகின்றது. அவரது ரூஹிலிருந்து வருகின்ற அவர் உணரும் அமைதி அவர் மீதான ரூஹுல்-குத்தூஸின் தொடர்பின் காரணத்தால் ஆகும். இந்த விளக்கம் இறைத் தூதரின் காலகட்டத்தில் நிச்சயமாக உண்மையாகின்றது ; அதன்படி அவருடைய பரிசுத்த ஆவியின் தொடர்பு ஒரு முறை நிகழ்வாக அல்லாமல், பூமியில் அவரது முழு வாழ்க்கையுமே பரிசுத்த ஆவியின் தொடர்பில் பங்கெடுத்து இறை சக்தியின் ஆதாரமான அல்லாஹ் (swt)வுடன் அவரை இணைக்கிறது.

தெய்வீக ஊற்றிலிருந்து இறை மனிதர் வரும்போது, அவர் ஷெய்த்தானால் சோதிக்கப்படுகிறார், ஏனென்றால் அவருக்குள் உள்ளார்ந்த ஷெய்த்தான், அவரது தூதுத்துவப் பணியிலிருந்து அவரை வழி தவற செய்ய முயற்சிக்கிறான். அல்லாஹ்வின் ஒரு தூதர் ஷைத்தானின் இனிமையான பேச்சுகளை இறைவனின் பேச்சு என்று நினைத்து தடுமாறலாம். ஆனால்(அவ்வாறு) நீண்ட காலத்திற்கல்ல. ஏனென்றால், அல்லாஹ்வின் உண்மையான தூதர் அவரை அனுப்பியவனுடன் விரைவாக ஒன்றிணை க்கப்படுகிறார், எனவே அவர் தனது பணியை அமைதி, நம்பிக்கை, பொறுப்பு மற்றும் அல்லாஹ்வின் அன்புடன் தொடர முடிகின்றது.

நிச்சயமாக, அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களை ஷெய்த்தானால் ஒருபோதும் வழி தவற செய்ய முடியாது. ஷெய்த்தான் ஒருவரைத் திசைதிருப்பி, அவர் ஷெய்த்தானிய நிலையில் இறந்துவிட்டால், ஆட்சேபனைக்குரிய அந்நபர் உண்மையில் அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியாரின் அடிப்படை சாராம்சத்தில் இருந்ததில்லை என்று கொள்ளவேண்டும். அல்லாஹ் தனது மிகக் கடுமையான எதிரிகளை அவர்களின் சுவடே இல்லாமல் அழித்து விடுகின்றான் என்பதை நிரூபிப்பதற்குரிய கடந்த கால எடுத்துக்காட்டுகள் நம்மிடம் உள்ளன. அவர்கள் மனந்திரும்பினால், இந்த விவகாரம் அல்லாஹ்விடம் உள்ளது. ஆனால் அவர்கள் அல்லாஹ்வின் சாபத்தின் நிலையில் இறந்தால், அல்லாஹ் அவ்வாறு தீர்மானித்து விட்டால், அந்த இடத்திலேயே அல்லாஹ்வால் பிடிக்கப்படுவதிலிருந்து அவரை எதனாலும் தடுத்து விட முடியாது.

அல்லாஹ் நமது அறிவாற்றலை தூய்மைப்படுத்தி, அவனது படைப்புகளின் உண்மைகளையும், புனித குர்ஆனில் உள்ள உண்மைகளையும் புரிந்துகொள்ள உதவுவானாக!. ஜமாஅத் உல் சஹிஹ் அல் இஸ்லாமின் உங்கள் ஒவ்வொருவருக்கும் புனித குர்ஆனின் உள்ளடக்கங்களை பிரதிபலிக்க அல்லாஹ் நுண்ணறிவை வழங்குவானாக! - குர்ஆனே எல்லையற்ற அறிவின் நீரூற்றாகும் - மற்றும் அதன் தூய்மையான அடிப்படை சாராம்சத்தையும், உண்மையான விளக்கங்களையும்

கொண்டு உங்கள் வாழ்க்கையையும் வரவிருக்கும் எல்லா காலத்து மக்களின் வாழ்க்கையையும் விழிப்பூட்ட முடியும். இன்ஷா அல்லாஹ்

*இறுதியாக ஹசரத் மஸீஹ் மவூது (அலை) அவர்களுக்கு பலவேறு முறை இறங்கிய இறைவஹீ இதுவாகும் "**நான்(அல்லாஹ் ) என் நபியுடன் நிற்பேன் அவரை எதிர்ப்பவர்களை நானும் எதிர்ப்பேன்**" என்று எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மை எச்சரிக்கின்றான்***[al-Hakam, vol. 6, no. 16, April 30, 1902, p. 6–7)**

**ஜசாக்கல்லாஹ்**